Registered as a News Paper
பொழிவு: 27
குவிப்பு: 05
பக்கங்கள்: 08
விலை: 50/-
ஆடி: 2022

# மன்னா

(ISSN 1800-2641) MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 41வது புதிய ஆண்டுப்பயணம்"

# மடுத்திருத்தல ஆடித்திருவிழா



## "இந்து சமுத்திரத்தின் முத்து, பிச்சை கேட்கிறது" ஆடித்திருவிழாவில் - யாழ் ஆயர்

இவ்வருடத்திற்கான ஆடித்திருவிழா மடுத்திருத்தலத்தில் கடந்த 02.07.2022 அன்று காலை 06.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானபிரகாசம் ஆண்டகை ஆகியோரின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இத் திருவிழாத் திருப்பலியில் யாழ் மறைமாவட்ட ஆயர் மறையுரையாற்றுகையில் இலங்கையின் தற்கால அரசியல் நிலைமை மற்றும் ஆட்சியாளர்களின் பொறுப்பற்ற செயல்களால் மக்கள் எதிர்நோக்கியுள்ள இன்னல்கள் மற்றும் ஏழ்மை நிலை குறித்து மறையுரையில் குறிப்பிட்டிருந்தார். வழமை போலவே இவ்வருடமும் இத் திருவிழாத் திருப்பலியில் ஏராளமான அருட்பணியாளர்கள், துறவிகள் மற்றும் யாத்திரிகர்கள் கலந்துகொண்டு மடு அன்னையின் ஆசீரைப் பெற்றனர்.

07

# பெரியகட்டு, தூய அந்தோனியார் திருத்தல திருவிழா



பெரியகட்டு தூய அந்தோனியார் திருத்தல ஆண்டுத் திருவிழாவானது இம்மாதம் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணி 06ஆம் திகதி (முதல் சனி ) திருவிழா நடைபெற இருக்கின்றது. சிறப்பாக இவ்வாண்டு இத்தாலி நாட்டின் பதுவை நகரிலிருந்து எமது ஆயரின் முயற்சியினால் கொண்டுவரப்பட்ட தூய அந்தோனியாரின் புனித பண்டம் (எலும்பு) 28ம் திகதி மன்னாரிலிருந்து பவனியாக எடுத்து வரப்பட்டு எமது திருத்தலத்தில் மக்களின் ஆராதனைக்காக வைக்கப்படவுள்ளது.

இப்பவனியிலும், திருவிழா திருப்பலியிலும் கலந்துகொண்டு புனிதரின் பரிந்துரையினால் இறையாசீர் பெற அன்புடன் அழைத்து நிற்கின்றோம். தினமும் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். திருவிழா திருப்பலி காலை 7.30 மணிக்கு ஆயர்தந்தை தலைமையிலும் மாலை 4.30 மணிக்கு குருமுதல்வர் தலைமையிலும் நடைபெறும். போக்குவரத்து வசதிகள் திருவிழா நாளுக்கு ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. ஏனைய நாட்களில் திருத்தலத்தில் தங்கவிருக்கும் பக்தர்கள் புகையிரதம் மூலம் வர விரும்பினால், நேரத்துடன் எமக்கு தெரியப்படுத்தவும், மேலதிக தகவல்களுக்கு பரிபாலகருடன் தொடர்பு கொள்ளவும். (0770068103) இறையாசீர் என்றும் உங்களுடன் இருப்பதாக.

பரிபாலகர் அருட்பணி. அன்ரனிற்றோ அருள்றாஜ் குரூஸ்

# குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் அருட்பணியாளர்கள்



S. மரியதாசன் லியோன்
01.08.2022



G. அருட்பிரகாசம்
01.08.2022



R. அகஸ்ரின் புஸ்பறாஜ்
01.08.2022



P. கிறிஸ்து நேசரெட்ணம்
01.08.2022

குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் S. மரியதாசன் லியோன், G. அருள்பிரகாசம், R.அகஸ்ரின் புஸ்பராஜா, P. கிறிஸ்துநேசரெட்ணம் ஆகியோரை மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவர் சார்பாகவும் மன்னா வாழ்த்துக்களையும், செபத்தையும் தெரிவித்துமகிழ்கின்றது.

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

**அன்பான வாசகர்களே!**

எமது நிகழ்காலம் பல கேள்விகளுக்கு உட்பட்டு எதிர்காலம் என்னவாகுமோ என்ற ஏக்கத்தோடு நாம் அனைவரும் வாழ்ந்து வரும் காலம் இது. அரசியல் ஏமாற்றம், களவு, பொய், ஏமாற்று எண்ணம், காம வெறி, கொலை என்று அடுக்கிக் கொண்டே போகலாம். முன்னொரு காலம் நாம் வாழ்ந்த கூட்டுக் குடும்ப வாழ்வு, துவிச்சக்கர பயணம், நடந்தே தேவைகளை செய்து முடித்தல். ஒருவருக்கு ஒருவர் உதவக் காத்திருத்தல். பொறுமையாயிருத்தல் போன்ற வாழ்வின் நிலைகளை இந்நாட்களில் நாம் அனுபவிக்கின்றோம்.

இயற்கை அழிவு உலகில் தொடங்கியது, பின்னர் குண்டு வெடிப்புக்கள், கொரோனா நோய் பரவல் மனித உயிர்கள் பறிக்கப்பட்டது, நாடுகளுக்கிடையில் யுத்தம். இவ்வாறு பல துன்பங்களை உலகம் கண்ட போது எமது நாடு, பொறுப்பற்ற நாட்டுத் தலைவர்களால் தவறாக வழிநடத்தப்பட்டு, பணமும், சொத்துக்களும் சூறையாடப்பட்டு எமது வரிப் பணத்தை தவறாகப் பயன்படுத்தியும், வெளிநாடுகளிடம் மிதமிஞ்சிய அளவு கடன்பெற்று தேவையில்லாத அபிவிருத்தி என்ற பெயரில் கட்டிடங்கள், பாதைகள், நகரம் என்று தேவை பாராமல் விமான நிலையங்கள், இன்னும் பல கட்டிடங்கள் என்று கடனுக்கு மேல் கடனை நாட்டின் மீது சுமத்தி தாங்கள் தப்பித்துக்கொள்ள வழி பார்த்த நிலையில், மக்கள் விழித்தெழுந்து 100 நாட்களுக்கு மேலாக ஆர்ப்பாட்டங்கள். "தலைவர்கள் வெளியேறுங்கள்" என்று அனைத்து மக்களும் ஒன்றாக அணிதிரளும் போது இது சாத்தியமானது. வெளியேறுவது முக்கியமல்ல. அவர்களின் சொத்து மற்றும் பணம் என்ன என்றும், தற்போது அவர்களின் சொத்து, பணம் இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் எவ்வளவு என்று பார்த்தால் அதிகம் மக்களிடமிருந்தும், வெளிநாட்டுக் கடன்களில் இருந்தும் கொள்ளையடிக்கப்பட்டது என்பதை உறுதி செய்து அவை அனைத்தும் அரச உடைமையாக்கப்பட்டு கடன் தீர்க்கப்பட வேண்டும். இதற்கு அரச தலைவர்கள் நீதியோடும் உண்மையோடும் எல்லா மக்களையும் ஒரே நாட்டு மக்கள் என்று கருதி சமத்துவத்தோடு வழிநடத்த வேண்டும். இப்படிப்பட்ட ஒரு போராட்டம் இதற்கு முதல் தேவைப்பட்டது. ஆனால் நாம் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டோம், கைவிடப்பட்டோம், கொலை செய்யப பட்டோம். அதை நினைத்து மனம் துடித்து நிற்கின்றோம்.

காணாமல்போன உறவுகளுக்காக 13 ஆண்டுகளாக போராடினோம். பேரினவாத அரசு கண்டுகொள்ள வில்லை. அப்பாவி மக்களை காணாமல் ஆக்கியோரே இன்று காணாமலே போயுள்ளனர். காயப்பட்டு நொந்து நிற்கதியாயிருக்கின்ற மந்தைகளுக்காக உயிரைக் கொடுப்பது தான் நல்ல மேய்ப்பன். ஆனால் பயந்து பாய்ந்து தப்பி மந்தைகளே மேய்ப்பனைத் துரத்தும் அளவுக்கு வாழ்பவன் தலைவன் அல்ல. பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும் அன்று. இருந்தாலும் இந்தப் போராட்டம் நல்ல முடிவுக்கு வர வேண்டும், எதிர்காலத்தில் இவ்வாறான கொள்ளை, களவு நடைபெறக்கூடாது. விரைவில் எம் நாடு அபிவிருத்தி அடைய உள்ளூர் உற்பத்தியை வளர்க்க வேண்டும். ஒவ்வொரு குடிமக்களை இனிமேலாவது நல்ல தலைவரை பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்ய வேண்டும். பணம், பதவி அல்ல வழிநடத்தக் கூடிய நல்ல தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு நாடு வளம்பெற வேண்டும். இது எமது உரிமை.

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

# துயர் பகிர்கின்றோம்



கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மறைமாவட்ட அருட்பணியாளர் அருட்பணி. கலாநிதி அன்ரன் மத்தாயஸ் அடிகள் இறைவனடி சேர்ந்தார்.

இவர் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறை மாவட்டங்களில் கடந்த 49 ஆண்டுகளாக அருட்பணியாற்றியுள்ளார்.

யாழ். மறைமாவட்டத்தில் சிறிய குருமட அதிபராகவும், யாழ். கத்தோலிக்க அச்சகத்தின் முகாமையாளராகவும், பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பின்னர் யாழ் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் தலைவராகவும் முதநிலை விரிவுரையாளராகவும், நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலயம், கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயம், கோப்பாய் மரியன்னை ஆலயம் ஆகியவற்றின் பங்குத் தந்தையாகவும் பணியாற்றினார். இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற எமது மன்னார் மறைமாவட்டம் சார்பாக பிரார்த்திக்கின்றோம்.●

# 02வது காலாண்டிற்கான ம.து.ம.ச வின் துயர்துடைப்பு மறுவாழ்வு கல்வி மருத்துவப்பணிகள்

**வண.பிதா.தி.நவரெட்ணம் — தலைவர் ம.து.ம.ச, மன்னார்**





நாளாந்தம் வைத்திய சேவைக்காக உதவி வேண்டி வருபவர்களுக்கு மருத்துவ செலவிற்கும் போக்குவரத்துச் செலவிற்கும் இச்சங்கம் உதவி செய்து வருகின்றது. மேலும் பிள்ளைகளின் கல்வி தேவைக்காக மேலதிக வகுப்பிற்கும் கனணி தொடர்பாடலிற்கும் போக்குவரத்திற்கும் இச்சங்கம் உதவி செய்வதுடன் வறுமைக்கோட்டில் இருக்கும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு போசாக்கு உணவிற்கும் பின் தங்கிய பாடசாலைகளில் மேலதிக வகுப்பில் கல்விகற்கும் மாணவர்களுக்கு மதிய உணவும் வழங்கி வருகின்றது.

அத்துடன் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்ட வேளையிலும் வைத்தியர்கள் தாதிகள் தொழில்நுட்பவியலாளரின் விசேட பயிற்சிக்கும் தம்மாலான உதவியை பிராந்திய சேவைப் பணிப்பாளருக்கு இச்சங்கம் உதவி புரிந்தது.

எமது நிதியில் 60% நிதிஉதவி கல்விகற்கும் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் க.பொ.த சாதாரண உயர்தர பிரத்தியோக வகுப்பிற்கும் பல்கலைக்கழகம் நுழைவதற்கு உதவியாக விஞ்ஞான கணித விஷேட பாடநெறிகளை கல்விஇலாக ஒத்துழைப்புடன் 200 மாணவர்களுக்கு வருடாந்தம் நடாத்தி வருவதுடன் பல்கழைக்கழகத்தில் கற்கும் பெற்றோரை இழந்த வறுமைக் கோட்டில் உள்ள 20 மாணவர்களுக்க உதவி செய்வதுடன் எமது சங்கத்தில் உதவிபெறும் சுமார் 100 மாணவர்களுக்கு விசேட உளநல பயிற்சிகளை 28.05.2022இல் வாழ்வுதயம் மண்டபத்தில் நடாத்தியது.

மேலும் சிறையில் இருந்து மீண்ட குடும்பத்தினருக்கும் வாழ்வாதார உதவியாக மீன்பிடி வலைகளையும் பசு மாட்டையும் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவித்தது. மேல்கண்ட சகல பணிகளும் கௌரவ தலைவர் வண.பிதா.தி.நவரெட்ணம் ம.து.ம.ச மாதாந்தம் கண்காணித்து வருவது குறிப்பிடத்தக்கது.●

# பிலிப்பைன்ஸ் திருக்குடும்ப சபையின் மாகாணத் தலைவியாக அருட்சகோதரி மரிய கொறற்றி பீரிஸ் தெரிவு



பிலிப்பைன்ஸ் திருக்குடும்ப சபையின் மாகாணத் தலைவியாக அருட்சகோதரி மரியகொறற்றி பீரிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் முத்தரிப்புத்துறையை சேர்ந்த திரு. P. கிறிஸ்துராசா பீரிஸ் மற்றும் சவிரியம்மா பெர்னாண்டோ அவர்களின் மகளாவார். இவரை மன்னா பத்திரிகை சார்பாகவும் மறைமாவட்டம் சார்பாகவும் வாழ்த்துகின்றோம்.●

# கார்மேல் சபைக்கு புதிய மாகாணத்தலைவி



அருட்சகோதரி. நிலாந்தி அவர்கள் கடந்த 22.05.2022 அன்று கார்மேல் சபையின் புதிய மாகாண தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கல்முனை, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

இவர் 25 வருடங்களாக பாக்கிஸ்தானில் மறைபரப்புப் பணியாற்றி உள்ளார். புதிய பணிப்பொறுப்பை ஏற்றிருக்கும் இவருக்கு மன்னா சார்பாக எமது வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.●

# புனித யோசேவாஸின் அருட்சகோதரிகள் துறவற சபைக்கு புதிய மாகாணத் தலைவி



மன்னார் மறைமாவட்டத்தின் புனித யோசேவாஸின் அருட்சகோதரிகள் துறவற சபையின் இலங்கைக்கான புதிய மாகாணத் தலைவியாக அருட்சகோதரி. மொனிக்கா கிட்ணசாமி அவர்கள் கடந்த 29.06.2022 அன்று இச்சபையின் ஸ்தாபகரான மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அருட்சகோதரிகளான பொன்மலர், ஜெபமலர், மேரி, சாமலா பெர்னாண்டோ ஆகியோர் இவரது ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களாக மாகாணத் தலைவியாக பணியாற்றிய அருட்சகோதரி. பிறேமா அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு, புதிய பணிப்பொறுப்பை ஏற்றிருக்கும் அருட்சகோதரி மொனிக்கா மற்றும் அவரது ஆலோசகர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்களையும், செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.●

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம் **- மன்னா நிர்வாகம் -**

# மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

## ஆவணி 2022

01. புனித இராயப்பர் திருவிழா - வஞ்சியன்குளம்
05. மரிய மாதா திருவிழா - மாளிகைத்திடல்
06. புனித அந்தோனியார் திருவிழா - பெரியகட்டு
 - குழந்தையேசு திருவிழா - மூன்றாம்பிட்டி, ஆலங்குளம்
 - மடுத்திருப்பதியில் திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம்
 - புனித அந்தோனியார் திருவிழா - பள்ளக்கமம்
10. புனித லோறன்ஸ் திருவிழா - தலைமன்னார்
 - அருட்பணி.ஜோசப் பெனடிக்ற் தேவராஜா அடிகளாரின் நினைவு தினம் (2020)
15. மரியன்னையின் விண்ணேற்பு பெருவிழா - மடுமாதா திருவிழா
18. மடுமாதா திருவிழா - குட்செட்றோட்
 - அருட்பணி. தேவதாசன் எட்வின் அ.ம.தி அடிகளாரின் நினைவு தினம் (2014)
19. புனித சதாசகாய மாதா திருவிழா - குழந்தைஇயேசுபுரம் (மன்னார்)
20. புனித வேளாங்கண்ணி திருவிழா - தம்பனைக்குளம்
21. குழந்தையேசு சிற்றாலய திருவிழா - கள்ளியடிப்பிட்டி
22. புனித பரலோக அன்னை திருவிழா - கோமரசன்குளம், பறப்பாங்கண்டல்
 - அன்னை தெரேசா மறைபரப்பு அருட்சகோதரிகள் விழா
 - மடு அன்னை திருவிழா - சிதம்பரபுரம் (ஓமந்தை)
24. புனித பார்த்தலேமியு திருவிழா - ஓலைத்தொடுவாய்
25. கிறிஸ்து அரசர் திருவிழா - பெரியமடு
 - புனித யோசப்வாஸ் திருவிழா - தச்சன்குளம்
26. புனித பரலோக மாதா திருவிழா - முள்ளிக்குளம்
 - புனித சதாசகாயமாதா திருவிழா - கணேசபுரம், வெள்ளாங்குளம்
 - புனித அன்னை திரேசா திருவிழா - துட்டுவாகை
27. புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - மன்னார் வைத்தியசாலை
28. மடுமாதா திருவிழா - தங்கநகர்
 - அளவக்கை பங்குத் திருவிழா
 - புனித அந்தோனியார் திருவிழா - உயிர்த்தராசன்குளம்
 - பங்கு வழிபாட்டுக் குழு தினம்
30. குழந்தையேசு திருவிழா - மடுக்குளம்
 - புனித சவேரியார் திருவிழா - சுந்தரபுரம்
31. புனித சவேரியார் திருவிழா - ஆட்காட்டிவெளி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்டச் செய்திகள்

## சிறுக்கண்டல் புனித அந்தோனியார் ஆலய நுழைவாயில் திறப்பு விழாவும் ஆலயத் திருவிழாவும்



சிறுக்கண்டல் புனித அந்தோனியார் ஆலயத்தின் முன்னால் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டுள்ள நுழைவாயிலானது 13.06.2022 புனித அந்தோனியார் திருவிழா அன்று எமது மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டு திருவிழா திருப்பலியும் சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த முன் வளைவானது முன்னாள் பங்குதந்தை அருட்பணி. V.எமில் எழில்ராஜ் அவர்களின் எண்ணத்தில் ஆரம்பிக்கப் பட்டு அருட்பணி L. ஞானாதிக்கம் அடிகளாராலும் எமது தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி றொணிஸ்வாஸ் அடிகளாரின் முழுமையான வழிநடத்தலோடும் ஆலய மக்களின் ஒத்துழைப்போடும் கட்டி முடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.●

## பெரியநீலாசனை புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய திருவிழாத் திருப்பலி





பெரியநீலாசேனை புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத் திருவிழாவானது 24.06.2022 அன்று காலை 07.30 மணியளவில் திருச்செபமாலையுடன் திருவிழாத் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருப்பலியினை அருட்பணி தவராஜா அடிகளார் தலைமை தாங்கி நிறைவேற்றியதுடன் மேலும் தந்தையோடு இணைந்து பங்குதந்தை அருட்பணி நியூட்டன் அடிகளாரும் நிறைவேற்றியிருந்தனர்.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கிராமத்தில் என ஐந்து கிராமங்களில் சுழற்சி முறையில் நடைபெறும் இத் திருவிழாவானது இவ்வருடம் பெரிய நீலாசேனையில் "தாய் வயிற்றில் பிறக்கும் முன்பே என்னைத் தேர்ந்தெடுத்தார்" எனும் மையப்பொருளில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.●

## உயிலங்குளம் புனித இராயப்பர் ஆலய திருவிழாத் திருப்பலி








உயிலங்குளம் புனித இராயப்பர் ஆலயத் திருவிழாவானது 29.06.2022 அன்று காலை 07.00 மணியளவில் திருச்செபமாலையுடன் திருவிழாத் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. திருப்பலியினை முன்னாள் குருமுதல்வரும் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனருமான அருட்பணி விக்ரர் சோசை அடிகளார் தலைமைதாங்கி நிறைவேற்றியதுடன் மேலும் தந்தையோடு இணைந்து பங்குதந்தை அருட்பணி நியூட்டன் அடிகளாரும் மற்றும் பல அருட்பணியாளர்களும் இணைந்து நிறைவேற்றி இருந்தனர்.●

## தாழ்வுபாடு பங்கின் முதல்நன்மை கொண்டாட்டம்



தாழ்வுபாடு பங்கின் புனித சூசையப்பர் ஆலயத்தின் பங்குதந்தை அருட்பணி ஜெயபாலன் அடிகளாரின் ஏற்பாட்டில் கடந்த 19.06.2022 அன்று காலை 06.30 மணிக்கு அருட்பணி எட்வின் வசந்தராஜா (OMI) அடிகளாரினால் 33 மாணவ மாணவிகளுக்கு முதல்நன்மை திருவருட்சாதனம் வழங்கப் -பட்டது. இத் திருப்பலியில் அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.●

## முத்தரிப்புத்துறை முதல் நன்மை கொண்டாட்டம்



முத்தரிப்புத்துறை பங்கின் புனித செங்கோல் மாதா ஆலயத்தின் பங்குதந்தை அருட்பணி சத்தியறாஜ் அடிகளாரினால் கடந்த 19.06.2022 அன்று காலை 06.00 மணிக்கு 26 மாணவ மாணவி களுக்கு முதல்நன்மை திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இத் திருப்பலியில் அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.●

## வங்காலை முதல்நன்மை கொண்டாட்டம்



வங்காலை பங்கின் புனித ஆனாள் ஆலயத்தின் பங்குதந்தை அருட்பணி M. ஜெயபாலன் அடிகள் மற்றும் உதவி பங்குதந்தை அருட்பணி P.பிரசாந்தன் அடிகள் ஆகியோரால் கடந்த 19.06.2022 அன்று காலை 06.00 மணிக்கு 54 மாணவ மாணவிகளுக்கு முதல்நன்மை திருவருட்சாதனம் வழங்கப் பட்டது.


இத்திருப்பலியில் அருட்பணி மில்பர் வாஸ் CMF அடிகள் அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.●

## எழுத்தூர் முதல்நன்மை கொண்டாட்டம்



எழுத்தூர் பங்கின் புனித அடைக்கல அன்னை ஆலயத்தின் பங்குதந்தை அருட்பணி நவரெட்ணம் அடிகளின் ஏற்பாட்டில் கடந்த 19.06.2022 அன்று காலை 07.00 மணிக்கு அருட்பணி யேசுராஜா சில்வா (IVD) அடிகளாரினால் 11 மாணவ மாணவிகளுக்கு முதல் நற்கருணைத் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. இத் திருப்பலியில் அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.●

## உயர்கல்விக்காக இத்தாலி செல்லும் அருட்பணியாளர்களை வாழ்த்துகின்றோம்



மன்னார் மறைமாவட்ட ஆயருடைய முன்னைநாள் செயலாளராக பணிபுரிந்த அருட்பணி நீக்கிலஸ் அடிகளார் உரோமை நகரிற்கும் மற்றும் பறப்பாங்கண்டல் பங்கின் முன்னைநாள் பங்குதந்தையாக பணிபுரிந்த அருட்பணி அ.றஜனிகாந் அடிகளார் இத்தாலி தேசத்திலே பதுவை நகரிற்கும் தங்களது உயர்கல்விக்காக சென்றுள்ளனர்.

இவர்கள் நற்சுகத்தோடும் ஆன்ம பலத்தோடும் தமது கல்வியை கற்று எமது மறைமாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றுவதற்குரிய இறையாசீர் நிறைவாகக் கிடைக்க எமது மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.●

## கரிற்றாஸ் வாழ்வுதயத்தால் நிறுவப்பட்ட வீதி விபத்து எச்சரிக்கைப் பதாதை



மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஒருங்கிணைந்த முழுமனித அபிவிருத்திக்கான விசேட திட்டத்தின் கீழ் (IHD- Civic Dialogue Special Progect) இன் கீழே முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் ஒன்றான பொருளாதார அபிவிருத்தி செற்பாட்டின் ஓர் அங்கமாகிய வீதி விபத்தினை குறைக்கும் நோக்கில் முன்னெச்சரிக்கையான விழிப்புணர்வு பதாதையானது மன்னார் - மதவாச்சி A14 வீதியில் கள்ளிகட்டைக்காடு கிராமத்தின் பிரதான வீதிக்கு அருகாமையில் வாழ்வுதயத்தின் நிதி அனுசரணையுடனும் இயக்குனர் தந்தையின் அனுமதியுடனும் கிராம மக்கள் அதாவது இணைந்த கரங்கள் சமூக மட்ட அமைப்பினரின் ஒத்துழைப்புடனும் நடப்பட்டு கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி செ.அன்ரன் அடிகளாரால் 13.07.2022 அன்று காலை 10.00 மணியளவில் ஆசிர்வதிக்கப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# "மீட்புத் திட்டத்தில் நல்ல தந்தை புனித யோசேப்பு"

அருட்கலாநிதி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ.
இயக்குநர், புனித யோசே வாஸ் இறையியல் கல்லூரி.
இயக்குநர், மன்னார் மறைமாவட்ட திருவிவிலிய ஆணைக்குழு.

**திருஅவை வரலாற்றின் இடைநடு நவீன காலம் (கி. பி. 15ஆம் நூற்றாண்டு - 17ஆம் நூற்றாண்டு வரை)**

இந்தக் கால கட்டங்களிலே புனித யோசேப்பு மீதான பக்தியும் ஆர்வமும் மேற்கத்திய நாடுகளில் வேகமாக பரவத் தொடங்கியது. 1414ல் இறையியலாளரான ஜெர்சோன் கொன்ஸ்தாந்துநோபிளில் கூடிய பொதுச்சங்கத்தில் "யோசேப்பும் தாயின் வயிற்றில் இருந்தபோதே தொடக்கப் பாவத்தில் இருந்து புனிதமாக்கப் பெற்றார், கற்பில் சிறந்தவராக விளங்கினார், இறப்புக்குப் பிறகு உடலோடும் ஆன்மாவோடும் நிச்சயமாகவே விண்ணேற்பு அடைந்தார்" என்று புனித யோசேப்பு குறித்த கருத்தியல்களை மரியன்னையின் வாழ்வோடு ஒப்பிட்டு வழங்கினார். மேலும் புனித சியன்னா பெர்னார்தினோ (கி.பி.1444) "திருக்குடும்பத்தில் உள்ள யோசேப்பு, மரியா, இயேசு மண்ணகத்தில் இணைந்து வாழ்ந்தது போன்றே விண்ணகத்திலும் சேர்ந்து ஆட்சி செய்வார்கள்" என்று எடுத்துரைக்கின்றார்.

இந்தக் காலகட்டத்தில் இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகளில் புனித யோசேப்பு மீதான பக்தி மேலோங்கி வளர்ந்தது. இதன் விளைவாக கி.பி. 1479ம் ஆண்டிலே, திருத்தந்தை 4ம் சிக்ஸ்துஸ் அவர்கள், மார்ச் 19ம் தேதியை, புனித யோசேப்பின் திருநாளாக அறிவித்து உரோமைத் திருவழிபாட்டு நாட்காட்டியிலும் இணைக்கப் பணித்தார். புனித யோசேப்புவிற்கு கி.பி. 1540ஆம் ஆண்டு உரோமாபுரியிலே முதன்முதலாக ஒரு ஆலயம் எழுப்பப்பட்டது.

16ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த அவிலா புனித தெரேசா "நமக்கு அனைத்து தேவைகளிலும் கடவுளிடம் உதவி பெற்றுத்தரும் சுதந்திரத்தை புனித யோசேப்பு பெற்றிருக்கின்றார். அவரது பாதுகாவலை மன்றாடுகின்ற -வர்கள் எவரும் அதை அடையாமல் இருந்ததில்லை" என்று நம்பிக்கையுடன் அறிக்கையிடுகிறார். கி.பி. 1546ஆம் ஆண்டு புனித யோசேப்பு மற்றும் கன்னி மரியா திருமண விழாவைக் கொண்டாட பிரான்சிஸ்கன் சபை துறவிகளுக்கு திருத்தந்தை 3ஆம் பவுல் அனுமதி வழங்கினார். கி.பி. 1550ஆம் ஆண்டிலே போருக்குச் சென்ற பேரரசர் சார்லசுக்கு புனித யோசேப்பின் பழமையான பரிந்துரை செபத்தை திருத்தந்தை 3ஆம் ஜூலியஸ் அனுப்பி வைத்தார்.

கி.பி. 1582ஆம் ஆண்டு சீனாவிற்கு நற்செய்தி அறிவிக்க சென்ற இயேசு சபைக் குருவாகிய மத்தேயு ரிக்சியு அந்நாட்டை புனித யோசேப்புவிற்கு அர்ப்பணித்தார். கி.பி. 1597ல் புனித யோசேப்பின் முதல் மன்றாட்டு மாலை உரோமாபுரியிலே வெளியிடப்பட்டது. 17ஆம் நூற்றாண்டுப் பகுதியிலே வாழ்ந்த புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் (கி.பி. 1622) "ஆண்டவர் இயேசுவிடமும் அன்னை மரியாவிடமும் நமக்காக பரிந்து பேசுபவராக புனித யோசேப்பு விளங்குகிறார்" என்று குறிப்பிடுகிறார்.

கி.பி. 1621ல் திருத்தந்தை 15ஆம் கிரகோரி மார்ச் மாதம் 19ஆம் திகதி கொண்டாடப்பட்ட புனித யோசேப்பு விழாவை கடன் திருநாளாக அறிவித்தார். இதே ஆண்டிலேதான் கார்மேல் சபையின் பாதுகாவலராகவும் புனித யோசேப்பு ஏற்படுத்தப்பட்டார். மேலும் இக்காலப் பகுதியிலே கி.பி.1665ல் பிரான்சிஸ்கன் சபை துறவியான ஆசிர்வதிக்கப்பட்ட மரியா தெ அக்ரெதா புனித யோசேப்பின் வாழ்வை காட்சியாகக் கண்டு அதை தனது 'கடவுளின் மறைவான நகர்' (The mystical city of God) என்ற நூலிலே குறிப்பிடுகிறார்.

கி.பி.1689ல் உயிர்ப்பு பெருவிழாவைத் தொடர்ந்து வரும் 3ஆம் ஞாயிறன்று, புனித யோசேப்பின் பாதுகாவல் விழாவைக் கொண்டாட கார்மேல்சபை துறவியர் திருத்தந்தையிடமிருந்து அனுமதி பெற்றுக்கொண்டனர். இந்த காலகட்டத்திலேயே புனித யோசேப்பின் புதன்கிழமை பக்தி முயற்சி தோற்றம் பெற்று வளரத் தொடங்கியது.

**திருஅவை வரலாற்றின் நவீன காலம் (கி. பி. 18ஆம் நூற்றாண்டு - 19ஆம் நூற்றாண்டு வரை)**

கி.பி. 1714ஆம் ஆண்டு திருத்தந்தை 11ஆம் கிளமெந்த் மார்ச் மாதம் 19ஆம் தேதி விழாவுக்கான சிறப்பு திருப்பலி மற்றும் திருப்புகழ்மாலை செபத்தை ஏற்படுத்தினார். கி.பி. 1726ல் திருத்தந்தை 13ஆம் பெனடிக்ட் 'புனித யோசேப்பு - கன்னி மரியா திருமண விழா' வை திருஅவை முழுவதும் ஜனவரி 23ஆம் திகதி கொண்டாடி சிறப்பிக்க பணித்தார்.

18ஆம் நூற்றாண்டிலே இந்தியாவிற்கு வந்த வீரமா முனிவர் (கொன்ற்சான்சோ பெஸ்கி - கி.பி. 1747) புனித யோசேப்பை தலைவராகக் கொண்டு 'தேம்பாவணி' காப்பியத்தைப் படைத்தார். அத்தோடு புனித யோசேப்பிற்கு வளனார் என்ற அற்புதமான பெயரைச் சூட்டிய பெருமையும் இவரையே சாரும். இந்தக் காலப்பகுதியிலே வாழ்ந்த புனித அல்போன்ஸ் லிகோரியார் (கி.பி. 1787) "மண்ணகத்தில் முப்பது ஆண்டளவாக தமது பெற்றோருக்கு பணிந்து நடந்த ஆண்டவர் இயேசு, தற்போது விண்ணகத்தில் தம்மிடம் யோசேப்பு கேட்கும் அனைத்து வரங்களையும் தப்பாமல் பொழிந்து வருகிறார்" என்று புனித யோசேப்பின் இடைவிடாத பராமரிப்பைப் பற்றி எடுத்துரைக்கிறார்.

19ஆம் நூற்றாண்டின் காலப் பகுதியானது புனித யோசேப்பு பக்தியின் சிறப்பான காலமாக அறியப்படுகின்றது. புனித யோசேப்பை 'யோசேப்பர்' என்று மரியாதையாக அழைக்கும் வழக்கம் தமிழ் வழக்கில் தொடங்கியது. இந்தக் காலத்தில்தான் 'புனித யோசேப்பர்' என்ற சொல்லானது 'புனித சூசையப்பர்' என்ற மருவல் பெயரைப் பெற்றது. இந்தக் காலப் பகுதியில்தான் திருத்தந்தை அருளாளர் 9ஆம் பத்தினாதர் (பயஸ்) 'புனித யோசேப்பு உலகளாவியத் திருஅவையின் பாதுகாவலர்' என அறிவித்தார்.

கி.பி. 1880ல் இத்தாலியில் உள்ள வெரோனா மறைமாவட்டம் புனித யோசேப்புவின் உத்தரியத்தைப் பயன்படுத்த திருவழிபாட்டு பேராயத்திடம் அனுமதி பெற்றது. கி.பி. 1889ஆம் ஆண்டு திருத்தந்தை 13ஆம் லியோ 'புனித யோசேப்பு பக்தி முயற்சிகள்' என்ற சுற்றுமடல் (ஞரயஅஙரயஅ`டரசநைள) வழியாக மார்ச் மாதத்தில் புனித யோசேப்புவிற்கு சிறப்பு வணக்கம் செலுத்தும் வழக்கத்திற்கு அங்கிகாரம் அளித்தார். புனித யோசேப்பு உத்தரியத்தை அனைத்து கத்தோலிக்கர்களும் அணிய கி.பி. 1893ல் திருவழிபாட்டு பேராயம் அனுமதி வழங்கியது.

(அடுத்த இதழில் தொடரும்)

# யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

அருட்பணி. J.C. அன்ரனிபாலா
யாழ் மறைமாவட்டம்

இதற்கு இவரது செயலர்கள் அருட்பணியாளர்கள் கிங்சிலி சுவாம்பிள்ளை, ஜோ.பொ.இ செல்வராஜா, பு.அ. இராஜரட்ணம் போன்றவர்கள் துணைநின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆயினும் ஒருவருடைய குறிப்பிட்ட பிரச்சனை பற்றித் தூர அவர் வரும்போதே முகத்தின் குறிப்பறிந்து, அவர் கூறமுன்பே அவரது சிக்கலையும் அதற்கான தீர்வையும் சொல்லித் திக்குமுக்காட வைத்துவிடும் இவரது மதிநுட்பத்திற்கு இவரது செயலர்கள் உதவியிருப்பார்கள் என்பது சந்தேகமே. அனைத்தையும் அறிய எங்கும் இவருக்கென்று ஆட்கள் இருந்தனர் என்று பலர் கூறுவதுண்டு. ஆனால் வவுனியாவில் அவ்வேளை பணியாற்றிக்கொண்டிருந்த மறை போதகர் எஸ். அந்தோனிப்பிள்ளையிடம் வவுனியாவில் இருந்து மூன்று மைல்கள் காட்டுப்பகுதிக்குள் இருந்த வீரபாகு குடும்பத்தின் திருமணத்தைச் சீராக்க உதவும்படி கூறியது இவர் தன்மக்களை மிகவும் இயல்பாகவே அறிந்திருந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டு எனலாம்.

**ஆயரின் மறைவும் ஆயரின் நினைவும்**

தன் துன்பம் நோக்காது மக்கள் பணியில் தன்னைக் கரைத்ததனால் முதல் சுதேச பணியாளராகத் தனக்கிருந்த நோயைப் பொருட்படுத்தாமலும் வெளிப்படுத் தாமலும் இருந்த படியால் இவரது சாவு திடீர் நிகழ்வாகவே நடந்தேறியது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமாய் இருந்த வைத்திய கலாநிதி. ஜே.பி.சி. பிலிப்ஸின் உதவியுடன் அடிக்கடி நோயின் தீவிரத்தன்மையை குறைத்துவந்தார். 1972.07.17 திங்கள் அன்று கூட வைத்தியரின் ஆலோசனையுடனேயே பலாலியில் இருந்து கொழும்புக்கான விமானப் பயணத்தை அருட்பணி. ஜோ.பொ.இ. செல்வராஜாவின் துணையுடன் மேற்கொண்டார். விமானத்தில் ஏற்பட்ட கடும் சுகவீனம் காரணமாகக் கொழும்பு புனித மிக்கேல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பிரபல வைத்தியர்கள் பலரது சிகிச்சைகளும் பலனளிக்காமல் போய்விட இரவு 11.45 மணிக்கு உயிர் துறந்தார். இவ்வாறு எவரும் எதிர்பாராது சாவைத் தழுவிக் கொண்ட இவரது உடலை, இவருடன் தேசிய மயமாக்கல் தொடர்பாகப் பல முரண்பாடுகளைக் கொண்டிருந்தாலும், இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணத் திற்கு விசேட விமானப்படை விமானத்தில் அனுப்பியமை இவரில் பிரதமர் கொண்டிருந்த மதிப்பை எடுத்துக்காட்டியது. இலங்கை வாழ் அமைச்சர்கள் அரச, அரசுச் சார்பற்ற அதிகாரிகள், மதத்தலைவர்கள் பெருந்திரளான இறைமக்கள் அனைவரும் பிரசன்னமாக இருக்க யாழ். பேராலயத்தில் 1972.01.21 வெள்ளி மாலை 4.30மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

இவரின் பெயரில் கல்வி நிதியம் ஒன்று இவரது சாவின் ஓராண்டு நிறைவில் 1973.07.17இல் ஆரம்பிக்கப்பட்டது.



மறைமாவட்ட ஆயரின் கண்காணிப்பின் கீழ் செற்பட்ட இந்த நிதியத்தினால் இன, மத, வேறுபாடுகளின்றி பல கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஏழை மாணவர்கள் தொடர்ந்துவந்த பல ஆண்டுகள் பயன் பெற்றனர். ஏற்கெனவே ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் 1972 ஆவணியில் கொண்டாடப்பட்ட கல்லூரியின் நூற்றாண்டு நினைவாக அடிக்கல் நாட்டப்பட்டடு நிறுவப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் இவரின் சாவோடு "ஆயர் எமிலியானுஸ்பிள்ளை தொழில்நுட்ப, தொழில் பயிற்சி நிறுவனம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. போரின் காரணமாக இயந்திரங்களும், தளபாடங்களும் காணாமல் போனதுடன் இது கைவிடப்பட்டுள்ளது. மாதகல் புனித யோசேப்பு மகாவித்தியாலயத்தில் இவரது பணியின் நினைவாக இவரது காலத்தில் 1932இல் நிறுவப்பட்டு, இவரது திருநிலைப்படுத்தலைத் தொடர்ந்து இவரது பெயரைத் தாங்கியிருந்த கட்டடத் தொகுதியொன்று 1995இடப்பெயர்வில் பாதிக்கப்பட்டுப் பின்பு புனரமைக்கப்பட்டு 2003.09.17இல் ஆயர் இ. தோமஸ் சௌந்தரநாயகத்தினால் திறந்து வைக்கப்பட்டது.

1973இல் காங்கேசன்துறை ஊறணியில் ''ஊறணி எமிலியானுஸ் கனிஸ்ட வித்தியாலயம்'' ஆரம்பிக்கப்பட்டது. 1882இல் திரு. வேறாட் பொன்ட் என்னும் கிறிஸ்தவப் போதகரால் ஆரம்பிக்கப்பட்டு 1918இல் 5ஆம் வகுப்பு வரையும், 1958இல் 10ஆம் வகுப்பு வரையும் இடம்பெற்ற காங்கேசன்துறை றோ.க.த.க பாடசாலையில் கல்வி கற்ற ஊறணி மக்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்கால வசதி கருதி இவரிடம் விண்ணப்பித்த போது, ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் நான்கு பரப்புகள் பாடசாலை கட்டக் கொடுக்கப்பட்டது. பங்குத்தந்தை லியோ துரைசிங்கம் அ.ம.தி.யின் மேற்பார்வையில் கட்டப்பட்ட இப் பாடசாலை "ஊறணி எமிலியானுஸ் கனிஸ்ட வித்தியாலயம்" என்றே பெயரிடப்பட்டது.

2020 ஜனவரி 19இல் இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி ஆயர் மேதகு தோமஸ் யே செங் நாங் ஆல் "ஓய்வு பெற்ற குருக்களுக்கான ஆயர் எமிலியானுஸ் பிள்ளை ஞாபகர்த்த இல்லம்" திறந்து வைக்கப்பட்டது. இவரது செயலராக இருந்து மனதறிந்து செயற்பட்ட அருட்பணி. ஜோ.பொ.இ. செல்வராஜாவினால் இது செயலாக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அருட்பணி. ஜோ.பொ.இ. செல்வராஜா பல தேவைகள் காரணமாகக் கொழுப்பு செல்லும் மறைமாவட்ட அருட்பணியாளர்கள் கொழும்பில் தங்கிநின்று தமது தேவைகளைக் கவனிக்கவும் மருந்துவ வசதிகளைப் பெற்று, இளைப்பாறிச் செல்லக்கூடிய இல்லமொன்றை 61, கிறகரீஸ் றோட் பொரல்ல என்னும் முகவரியில் அமைத்தார். இக்காணி ஏற்கெனவே திருச்சிலுவை சகோதரிகள், பெண் பிள்ளைகளுக்கான விடுதியொன்றை அமைக்க எமிலியானுஸ்பிள்ளையின் கோரிக்கையில் கார்டினர் சிற்றம்பலத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகும். தற்செயலாக இது ஆயரவர்களின் வீட்டுக்குப் பின்புறமாகச் சற்றுத் தள்ளி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(அடுத்த இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களம்

## இறைவனால் ஆனதே மனிதனால் மாறுமோ

மண்ணால் ஆனான் மனிதன்
என்று விவிலியம் சொல்கின்றது
அதையும் மாற்றிக் கொண்டு
இல்லை உண்மை என்று சொல்பவன்
மனிதனாக மாறியுள்ளான்

மரத்தை உண்டாக்கியவர் இறைவன்
ஆனால் அதன் இனத்தைக் கண்டவன்
மனிதன் என்றும் புகழ்ந்தனர்
தண்ணீரை உண்டாக்கியவர் இறைவன்
ஆனால் அதை இதற்குத்தான் என்று
புரிந்து பிரித்தவன் மனிதன்

மாதத்தை, கடிகாரத்தை,
தொலைத்தொடர்பு சாதனத்தை
என்று கண்டுபிடித்தவன் மனிதன்
ஆனால் அவனுக்கு ஞானத்தை அறிவை
அதற்காக கொடுத்தவர் இறைவன்
பிறப்பு ஒரு தடவை இறப்பு ஒரு தடவை
என்று வாழ்வது தான் மனித வாழ்க்கை

எதை எதற்கு எப்படி என்று
உணர்ந்தவன் மனிதன் மட்டுமே
என்று புரிந்து மனிதன் ஆட்டமோ
அதிகமாகி கொண்டே போகிறது
வேகமாக ஓடும் ரயில் இடையில்
நிற்க கூடும். இறைவன் நினைத்தது
மட்டும் அவர் நிசப்தமாக ஆக்கும்
வரை நடைபெறும் இறைவாழ்க்கையே
பெரிது உங்கள் வாழ்வும் மாறும்.....

L.சாள்ஸ் சர்மிலன்
கப்புச்சின் மறைப்பணித்தளம்- தரணிக்குளம், வவுனியா

## "வேத சாட்சிகள்"

அருள் மறையில் நாட்டம் கொண்டு
அகத்தினிலே மகிழ்வைக் கண்டு
அர்ப்பண வாழ்வினிலே திறனும் கொண்டு
ஆருயிரைக் கொடுத்தவரே வேத சாட்சிகள்
குருவாம் யேசுவின் அடியில் நின்று
இறைவேதம் கையில் கொண்டு
மறைசெழிக்க மாண்பு கண்டோர்
மன்னாரின் வேத சாட்சிகள்
நெஞ்சத்தில் வஞ்சகம் கொண்டு
நெடுங்கொடியோரின் சங்கிலியன்
பிஞ்சான மாந்தரைத் தான்
கொன்றொழித்தான் துண்டுதுண்டாய்
இறுதிவரை உறுதியாகி
இன்னுயிரைக் கொடுத்தேனும்
இறைமைந்தன் யேசுமறை
தளைத்திடவே சாவுமானார்
வேதத்தின் சாட்சிகளே
சிந்து குருதி மண்ணில் பரவி
உயர் மறையும் விருட்சமாகி
திருச்சிலுவை ஊன்றுமிடம்
திருத்தலங்கள் தோன்றினவே.
உண்மை மறையை அழிக்கலாமோ
உலகில் உள்ளோர் நினைத்தாலும்
உத்தமத்தான் எம்மறையின்
தத்துவமே அன்புதான்.



சி. சுஜீவன்
மடுரோட்

## அகதியின் தோற்றம் சமாதானம் காப்போம்

இயற்கையின் சீற்றமும்
அர்த்தமற்ற யுத்தமும்
நிலையற்ற அரசியலும்
முற்போக்கு அற்ற சிந்தனையும்
உருவாக்கியதே உலகில் அகதிகளை

உள்ளத்தில் சுமை உடலிலும் சுமை
நிம்மதி என்பது இல்லாத சொத்து
நிர்கதியாக பாரினில் பரிதாப வாழ்க்கை
ஒரு நொடியில் பிடி தவறி
உருவானதே அகதி வாழ்க்கை

இன மத நிற பேதங்களில்லா அகதிகள்
முகாம்களே அவர்களின் புகலிடம்
பசியும் பிணியும் அவர்களின் சாகாவரம்
வேதனையும் சோதனையும் தேசிய சொத்து

மக்களிடையே மனித நேயம் இல்லை
மனித மாண்பு மங்கிப்போயின
சகோதரத்துவம் சாகடிக்கப்பட்டன
சமத்துவ பேச்சும் அர்த்தமற்று போயின

அகதிகள் வாழ்வு வழம்பெறச் செய்யவே
சர்வதேசமே அகதிகள் தினமதை உருவாக்கியதே
மனிதம் காத்து மனித நேயம் வளர்த்து
மன்னிக்கும் மனதுடன் அயலவர் துன்பம் போக்கி
பகையினை மறந்து சமாதானம் காப்போம்

அ. ஜெயநாயகம் நோயல் டானியேல்
வட்டக்கண்டல்.

# சிறப்புக் கட்டுரை

## மருதமடு அன்னையே! உன் பாதம் சரணடைந்தோம்

அருட்தந்தை பி.ஜேசுறாஜா
இயக்குனர் - தியானஇல்லம், மடுத்தருத்தலம்

16ம் நூற்றாண்டில் இந்தியாவின் தென் கரையோரப்பகுதியில் (தூத்துக்குடி) வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்கள் இலங்கை நாட்டின் யாழ்ப்பாணக் குடாநாடு, கடற்கரையை அண்டிய பிரதேசங்கள், மன்னார் தீவுப்பகுதி, பெருநிலப்பரப்பின் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் வசித்து வந்த மக்களுக்கு கிறிஸ்தவ மறையைப் போதித்து வந்தனர். 1544ல் மன்னார் மற்றும் யாழ்ப்பாண மக்கள் இந்திய நாட்டின் வேதம் போதித்துக் கொண்டிருந்த மறைபோதகர் பிரான்சீஸ் சவேரியாருக்குத் தூது அனுப்பி அவரை இலங்கைக்கு வருமாறும் தமக்குக் கிறிஸ்தவ மறையைப் போதிக்குமாறும் வேண்டினர். ஆனால் மறைபோதகர் பிரான்சீஸ்சவேரியார் இந்தியாவில் மறைபோதகப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததன் காரணத்தினால் இலங்கை வருவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் கிட்டவில்லை எனவே இப்பணியைச் செய்வதற்கு ஒரு குருவானவரை அனுப்பி வைத்தார். இக்குருவானவர் மன்னார் தீவுப் பிரதேசத்தில் மறைபோதனை செய்து மக்களது உள்ளங்களில் விசுவாச வித்தை விதைத்தார். இதன் விளைவாக 6000க்கும் அதிகமானோர் திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தைப் பெற்று கிறிஸ்தவர் -களானார்கள். இச்செய்தியைக் கேள்விப்பட்ட யாழ்ப்பாண இராட்சியத்தை ஆண்டுவந்த சங்கிலியன் அரசன் தனது போர் வீரர்களை அனுப்பி மன்னார்த் தீவின் தோட்டவெளி என்னும் கிராமத்தில் இருந்த 600க்கும் மேற்பட்ட அனைத்துக் கிறிஸ்தவர்களையும் கொண்றொழித்தை சரித்திரம் தெட்டத் தெளிவாக கூறுகின்றது. திருமுழுக்குப் பெற்றகிறிஸ்தவர்கள் அனைவரையும் அழித்துவிட்டேன் என்ற இறுமாப்புடன் இருந்த சங்கிலியன் அரசன் அடுத்தகணம் கண்டது என்ன? அநியாயமாகக் கொல்லப்பட்ட புதுக்கிறிஸ்தவர்களின் ஒவ்வொரு துளி இரத்தமும் நாளுக்குநாள் புதுக்கிறிஸ்தவர் களை உருவாக்கியதன் விளைவாக 1583ல் மன்னார் தீவிலும் பெருப்பரப்பின் கடற்கரைப்பகுதியிலும் 26 ஆலயங்களும் 43,000 கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. அந்த வகையில் உருவாகிய 26 ஆலயங்களில் ஒன்று தான் மந்தையில் இருந்தது. இன்று புனித லூர்து அ்னையின் பெயரில் இயங்கும் அவ்வாலயமானது சில வருடங்களுக்கு முன்னதாக புதிதாகக் கட்டப்பட்ட தாகும். அதே இடத்தில் 16ம் நூற்றாண்டில் இருந்த பழமைவாய்ந்த ஆலயத்தில் தான் செபமாலை அன்னையின் சுரூபம் இருந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. அக்காலப் பகுதியில் மாந்தைக் கிராமத்தில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவக் குடும்பங்கள் அனைத்தும் தமது சிறியகிராமத்தில் குடி கொண்டிருந்த செபமாலை அன்னைமீது அதிகப்பற்றும், பக்தியும் மதிப்பும் கொண்டிருந்ததன் காரணமாக அடிக்கடி ஆலயம் சென்று செபமாலைத்தாயாரை வணங்கிவருவது வழக்கமான ஒரு பக்தி முயற்சியாக இருந்துள்ளது. இக்காலப் பகுதியில்தான் ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றினார். ஒல்லாந்தர் இலங்கையை ஆக்கிரமித்ததன் வெளிப்பாடாக கிறிஸ்தவர்கட்கெதிராக கொடூரமான வேதகலாபனை எழுந்தது. இலங்கையிலே குருக்கள் எவரும் இல்லாதகாலம் அக்காலம். 1670ம் ஆண்டில் பயங்கரமான வேதகலாபனையை எதிர்கொள்ள முடியாத மாந்தைக் கிறிஸ்தவர்கள் தமது உயிரைப் பாதுகாக்கும் முகமாகவும் செபமாலை அன்னையின் திருச் சுரூபத்தைப் பாதுகாக்கும் முகமாகவும் சுரூபத்தையும் தம்மோடு எடுத்துக்கொண்டு கண்டி இராட்சியமாகக் கருதப்பட்ட அடர்ந்த காட்டினுள் பிரவேசித்து காட்டு மிருகங்களின் தொல்லைகளையும் பொருட்படுத்தாது கால்நடையாகப் பயணம் செய்து கொண்டிருந்த வேளையில் பெரிய குளம் ஒன்றினைக் கண்டார்கள். தமது பாவனைக்குத் தேவையான தண்ணீர் உள்ளதினால் அவ்விடத்திலேயே தாங்குவதற்கு முடிவெடுத்தனர். அந்த இடத்தின் பெயர்தான் "மருதமடு" அன்று தொடக்கம் செபமாலை அன்னையை மருதமடு அன்னை (மடுமாதா) என அழைக்கத் தொடங்கினார். மருதமடு அன்னையின் சுரூபத்தைப் பாதுகாப்பாக வைக்கும் முகமாக பெரிய மரமொன்றில் துவரம் உருவாக்கி அத் துவாரத்தினுள் அன்னையின் சுரூபத்தை வைத்தனர். அதே காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் வேத காலபனையின் ஆக்கிரமிப்பு அகோரமாகவிருந்த படியினால் வேத கலாபனையில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முகமாக 700கிறிஸ்தவர்கள் மட்டில் பூநகரி ஊடாக அடர்ந்த காட்டினுள் பிரவேசித்து அவர்களும் மருதமடு அன்னையின் வழிநடத்தல் உடாக பாதுகாப்பாக மருதமடுவை வந்தடைந்தனார். மன்னார் பிரதேசத்தின் மாந்தைக் கிறிஸ்தவர்களும், யாழ்ப்பாணக்கிறிஸ்தவர்களும் மகிழ்ந்து ஆர்ப்பரித்ததோடு மருதமடுத்தாயாரை வாழ்த்தி வணங்கினர். அடுத்த நடவடிக்கையாக அனைவரும் ஒன்றிணைந்து களிமண்ணிளாலான சிற்றாலயம் ஒன்றினை அமைத்து மருதமடு அன்னையின் திருச்சுரூபத்தை அச்சிற்றலாயத்தினுள் அரங்கேற்றி வழிபடத் தொடங்கினர். இக்காலப்பகுதியில்தான் புனித ஜோசவ்வாஸ் அடிகளார் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகப் பயணம் செய்து மன்னார் சவுத்பாரில் கால்பதித்து இலங்கைக்குள் நுழைந்தார். அடிகளாரது அயராத ஆன்மீகப் பணிகளூடாக இலங்கையில் பலபாகங்களிலும் விரைவாக கிறிஸ்தவ மதம் பரவியது. பங்குகள் ஆரம்பிக்கப்பட்டன. மடுவானது உயர் பங்காக விளங்கியது. குருவானவர் ஒருவர் மடுத்திருத்தலத் -துக்குப் பொறுப்பாக இருந்தார். இலங்கை நாட்டினுள் ஆங்கிலேயர் வந்ததும் கிறிஸ்த்தவர்கட்கெதிரான வேத கலாபனை ஓய்ந்தது. இந்தியாவின் கோவை மானிலத்தில் இருந்து வருகைதந்த குருக்களின் பணிகள் துரிதமாக இடம்பெற இறைமக்களது மடுவுக்கான யாத்திரை ஆரம்ப -மாகியது. செபமாலை அன்னையின் திருச்சுரூபம் மருதமடுப் பிரதேசத்தினுள் வருகைதந்து மருதமடு அன்னையாக அழைக்கப்படத் தொடங்கிய 153 வருடங்களின் பிற்பாடு அதாவது 1823ம் ஆண்டில் மீண்டும் களிமண் கோயில் ஒன்று புதிதாகக் கட்டப்பட்டு குருக்களுக்கான குருமனையும் கட்டப்பட்டது. குருக்கள் குருமனையில் தங்கியிருந்து தமது ஆன்மீகப் பணிகளைச் செய்து வந்தனர். அன்னையானவள் மருதமடுவில் கால்பதித்து 200வருடங்களின் பிற்பாடு அதாவது 1870ல் ஆடித் திருவிழா ஆரம்பமாகியது. 1872ம் ஆண்டு ஆவணி மாதம் 08ம் திகதி தற்போதைய ஆலயத்திற்கான அத்திவாரக் கல் நடப்பட்டு கட்டிடப் பணிகள் ஆரம்பமாகின. அத்தோடு வசதிகள் கொண்ட குருமனை, நற்கருணைச் சிற்றாலயம் மற்றும் அழகிய லூர்து கெபிக்கான கட்டிடப் பணிகள் ஆரம்பமாகின. அதே காலப்பகுதியில் பெரிய குளமானது ஆழமாக்கப்பட்டு மடுப் பிரதேசத்தில் யாத்திரிகர்களாக வருகை தருபவர்களுக்கான குடிநீர் வசதிகளை ஏற்படுத்தும் முகமாக கிணறுகள் கட்டப்பட்டன. நாளுக்கு நாள் யாத்திரிகர்களின் வருகையும் அதிகரிக்கத் தொடங்கியது. தமிழர்கள், சிங்களாவர்கள் என்ற பாகுபாடு இல்லாது அனைவரும் ஒருதாய் பிள்ளைகள்போல் மடுத்திருத்தலத்திற்கு வருவதும் அன்னையை வணங்குவதும் மீண்டும் அவரவர் வீடுகளுக்குச் செல்வதுமாக இருந்தனர். ஒருசில வருடங்களில் அனைத்துக் கட்டிடப் பணிகளும் நிறைவு பெற்று மருதமடுத் திருத்தலமானது புதுப்பொலிவுடன் காட்சி அளித்ததாகச் சரித்திரம் கூறுகின்றது.

1924ல் மருதமடுஅன்னைக்கு முடிசூட்டப்பட்டது. அப்போதைய பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி முடிசூட்டு நிகழ்வினை நடாத்தினார். 1944ல் ஆலயமானது அபிஷேகம் செய்யப்பட்டது. ஆலயம் கட்டிதிறக்கப்பட்டு 40 வருடங்களின் பிற்பாடுதான் தற்போது நாம் காணும் அழகிய போட்டிக்கோ கட்டிடம் திறக்கப்பட்டது. 1974ல் அன்னையின் முடிசூட்டுப் பொன்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டதோடு மருதமடு அன்னையின் திருச்சுரூபமானது பவனியாக மன்னார், அனுராதபுரம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என அனைத்துப் பிரதேசங்கட்க்கும் கொண்டு செல்லப்பட்டு மீண்டும் மடுத்திருத்தலத்தை வந்தடைந்தது. 2000ம் ஆண்டில் அன்னையின் முடிசூட்டுப் பவளவிழா மடுவில் மிகவும் சிறப்பாகவும் பக்தியாகவும் இடம்பெற்றதோடு அன்னையானவள் இலங்கையின் அனைத்து மறைமாவட்டங் -களையும் மறைமாவட்டங்களின் பல பங்குகளையும் இறை மக்களையும் தரிசித்தது சரித்திரசம்பந்தமான ஒரு பெரிய விடயமாகும். உள்நாட்டுப்போர் முன்முலமாக நடைபெற்றுக் கொண்டு இருந்த வேளையிலும் இறைமக்கள் அன்னை தரிசித்த வேளையில் மடுத்திருத்தலத்துக்கு வந்த அன்னையைத் தரிசிக்க முடியாத சூழலில் வாழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் மருமடுத்தாயார் தமது இடங்களுக்கு வருகைத்தந்து மக்களைத் தரிசித்ததை பெருமனதுடன் போற்றிப் புகழ்ந்து அவரவரது மொழியில் உரத்த குரலெழுப்பி "தாயே! யுத்தம் காரணமாக நாங்கள் உமது வசிப்பிடம் நாடி வரமுடியாது தவித்துக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் நீர் எமது இடங்களுக்கு வருகைத்தந்து எம்மைத் தரிசித்து எமது தேவைகளைக் கேட்டறிந்து அவைகளை நிறைவு செய்ய முன்வந்துள்ளீரே கோடானக் கோடி நன்றி அம்மா" எனச் சத்தமிட்டு மன்றாடியது இன்றும் எமது காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. கொரோனா நோயையும் இல்லாதொழிக்க மருதமடுத் தாயாரினால் முடியும் என்ற நம்பிக்கையோடு தினமும் அன்னையை வேண்டுவோம். சுகமான வாழ்வு அனைவருக்கும் விரைவாகக் கிட்டும்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத புனிதர்கள்

## புனித பெர்னாடின் ரியலினோ
இயேசு சபை குரு (1530 — 1616)

இவர் இத்தாலி நாட்டில் கார்ப்பி என்ற நகரில் பிறந்தவர். லெச்சே என்ற ஊரில் படித்தார். இதே நகரில் 42 ஆண்டுகள் இயேசு சபைக் குருவாகப் பணிபுரிந்தார். இரு நகரத்தாரும் "எங்கள் புனிதர்" என்றே இவரை அழைக்கின்றனர். பொலோஞ்ஞா பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்தார். வெளியுலகில் பெரிய பதவிகள் காத்திருந்தன. இவர் முன்கோபியாக இருந்தார்.

ஒருநாள் நேப்பிள்ஸ் நகர் வீதியில் இரு துறவிகள் மிக அடக்கமாகச் செல்வதை இவர் பார்த்தார். புதிதாகத் தோன்றிய இயேசு சபையைச் சேர்ந்தவர்கள் இவர்கள் என அறிந்தார். அவர்களுடன் தொடர்பு கொண்டார். ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்களின் திருப்பலியிலும், சிறப்பாக மறையுரையிலும் பங்குபெற்றார். இவைகளே இவரது தேவ அழைத்தலுக்கு நல்ல வித்தாகத் திகழ்ந்தன. இந்நாட்களில் இவரது மனதில் குழப்பம் ஏற்பட்டது. தம் அறையில் தனிமையில் செபமாலை செபித்துக் கொண்டிருந்த போது மரியன்னை குழந்தை இயேசுவுடன் காட்சி தந்தார். குழப்பம் நீங்கியது. இயேசு சபையில் சேர உறுதி பூண்டார். கி.பி.1541- இல் சபையில் சேர்ந்தார். 52ஆண்டுகள் இயேசு சபையில் வாழ்ந்தார். தாழ்ச்சியின் பொருட்டுத் துணைச் சகோதரராகவே இருக்க விரும்பிய இவரைக் குருத்துவத்திற்குச் சபை தெரிந்துகொண்டது. குருவான பின் லெச்சே என்ற இடத்திற்கு வந்தார். இங்கு "எல்லாருக்கும் எல்லாமாக" நடந்து அனைவரின் மதிப்பையும் அடைந்தார்.

ஏழைகளைப் பேணுவதில் இவரது நாட்களில் இவருக்கு நிகர் இவரே. இவர் சாவுப் படுக்கையிலிருப்பதைக் கேட்ட மக்கள் கல்லூரிக்குப் படையெடுத்தனர். கல்லூரியின் நுழைவாயிலையே அடைக்க வேண்டியதாயிற்று. நகரின் தலைவரே (மேயர்) தந்தையின் இறுதி ஆசிபெற வந்துவிட்டார். கி.பி.1616ஆம் ஆண்டு யூலை 2ம் நாள் "ஓ, மிகுந்த வணக்கத்துக்குரிய ஆண்டவளே" என்று மரியின் பெயரை உச்சரித்தவாறு தமது ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார்.●

## புனித அந்தோணி மரிய சக்கரியா
குரு (கிபி 1503 — 1539)

மார்ட்டின் லூத்தர் ஒரு கத்தோலிக்க, அதுவும் ஒரு துறவற சபைக் குருவாக இருக்கும் போது, திருச்சபையில் நிலவிய பலவித தீமைகளைச் சுட்டிக்காட்டித் திருச்சபையை விட்டு வெளியேறினார். இதே அலங்கோலங்களைக் கண்ணுற்ற, லூத்தரின் காலத்தில் வாழ்ந்த புனித அந்தோணி மரிய சக்கரியா, திருச்சபைக்குள் இருந்து கொண்டே தம் ஈகை இரக்கச் செயல்களாலும் தமது புனித வாழ்க்கையாலும் பலரை மனந்திரும்பியது மட்டுமன்றி, ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றுமாகத் துறவற சபைகளை நிறுவினார். இவ்வாறு சபையின் அவலங்களை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டு மாபெரும் வெற்றியும் கண்டார். இக்கண்ணோட்டம் தான் அன்றும் இன்றும் என்றும் இன்றியமையாது வேண்டப்படுகிறது. இவரின் தாய் இவருக்கு 18வயது நடக்கும் போது கணவனை இழந்தார். அப்போதிருந்து அவர் புனிதரின் ஆன்மீக வாழ்வில் அக்கறை செலுத்தினார்.

நோயினால் தாக்கப்பட்ட ஏழை எளியோரை குணப்படுத்தும் நோக்குடன் சக்கரியா பதுவைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவக்கலை பயின்று பட்டம் பெற்றார். மக்களின் உடல் நிலையை மட்டுமல்லாது, உள்ளத்து நோய்களையும் குணமாக்க வேண்டும் என எண்ணி வேதக் கலையும் படித்தார். கிறிஸ்தவக் கோட்பாடுகளை மக்கள் அனைவருக்கும் கற்றுக் கொடுக்கத் திட்டமிட்டார். கி.பி.1530- இல் குருப்பட்டம் பெற்றார். உடனே "பர்ணபைட்ஸ்" என்ற ஒரு துறவற சபையை நிறுவினார். இத்தகைய அரும்பெரும் பணிகளிடையே சக்கரியா தமது 36ஆம் வயதில் விண்ணகம் சென்றார். அடிக்கடி திவ்விய நன்மை வாங்குவது, 40மணி நேரம் திவ்விய நற்கருணை திருமணி ஆராதனை போன்ற ஆன்மீக முயற்சிகளையும் இவர் தோற்றுவித்தார்.●

## புனித பொனவெந்தூர்
ஆயர், மறைவல்லுநர் (கி.பி.1221 — 1274)

ஜான் என்பதுதான் இவரது திருமுழுக்குப் பெயர். 4வயதில் இவரைத் துன்புறுத்திய கொடிய நோய் புனித அசிசியாரிடம் மன்றாடியதால் புதுமையாக நீங்கி நலம்பெற்றார். 17வயதில் பிரான்சிஸ்கன் சபைக்குரு மாணவரானார். புனித அக்வீனாஸ் தோமையாரும் இவரும் ஒரே நாளில் மறைவல்லுநர் பட்டம் பெற்றனர். பிரான்சிஸ்கன் சபைத் தலைவராக இவர் தேர்ந்து எடுக்கப்பட்ட போது, இவருக்கு வயது 36 மட்டுமே. 16 ஆண்டுகள் சபைத் தலைவராகச் சபையை நன்கு வளர்த்து வந்தார். "எளிமையான வேலைகளையும் உறுதி தவறாமல் செய்வதில்தான் துறவியின் புனிதம் அடங்கியுள்ளது. சிறிய செயல்களாயினும் இடைவிடாத உறுதி, இதில்தான் உயர்ந்த புண்ணியம் அடங்கி உள்ளது." என்று கற்றுக்கொடுத்திருக்கிறார். இன்று நாம் பழக்கத்தில் கொண்டிருக்கும் திரிகால மணியும், செபமும் இவரது சபையினருக்கு இப்புனிதர் தொடங்கிய பழக்கத்திலிருந்துதான் இத்தனை நூற்றாண்டுகளாகத் திருச்சபையில் வேரூன்றியுள்ளது. கீழ்ப்படிதலின் கட்டாயத்தின் பேரில் இவர் அல்பேனாவுக்கு ஆயராகவும், கர்தினாலாகவும் நியமனம் பெற்றார். மேற்கத்திய திருச்சபைகளை ஒன்று சேர்த்த பெருமையும் இவருக்கே உரியது. இவருக்கு இறப்பு நெருங்கிய போது திருத்தந்தையே இவருக்கு நோயில் பூசுதலை அளித்தார். இறையன்பு, செபம், காட்சித் தியானம் இவைகளில்தான் கூடுதலான நேரத்தை இவர் செலவிட்டார்.●

## புனித பிரிஜித்தம்மாள்
துறவி (கி.பி.1303 — 1373)

இவருக்கு 7வயது நடக்கும் போதிருந்தே சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து இவருக்கு பலமுறை காட்சி கொடுத்திருக்கிறார். பிற்காலத்தில் இவர் புரிய இருந்த பல்வேறு பிறரன்புத் தொண்டுகளுக்கு இது அடித்தளமாக அமைந்தது. கி.பி.1303 ஆம் ஆண்டு ஸ்வீடன் நாட்டில் தோன்றியவர் இவர். 14 வயதிலேயே மாக்னஸ் என்ற ஸ்வீடன் நாட்டு அரசனை மண முடித்தார். 8 பிள்ளைகளுக்குத் தாயானார். பிரான்சிஸ்கன் 3ஆவது சபை உறுப்பினராகவும் சேர்ந்துகொண்டார். இவர் தம் கணவர் இறந்தபின், இன்னும் மிகுந்த பக்தியுடன் வாழ விரும்பினார். தம் கணவர் கொடையாய் அளித்திருந்த நிலங்களையும், கட்டடங்களையும் வைத்து ஒரு துறவற மடத்தை நிறுவினார். இன்றுவரை "பிரிஜிடைன்" என்ற பெயரால் இந்தச் சபை பல தொண்டுகள் புரிந்து வருகிறது. கி.பி.1350ம் ஆண்டு ஐரோப்பா முழுவதிலும் பிளேக் நோய் பரவியிருந்தும் இவர் துணிவோடு உரோமை நகரில் நடைபெற்ற யூபிலி ஆண்டின் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். இவர் புனித நாட்டுக்குத் திருப்பயணமாகச் செல்லும் வழியில் இவரின் மகன் சார்லஸ் இறந்தார். கி.பி.1373- ஆம் ஆண்டில், உரோமையில் இவர் இருக்கும் போது இறைவனடி சேர்ந்தார். இவருடைய பிள்ளைகளில் கத்தரின் என்பவருக்குப் புனிதர் பட்டம் அளிக்கப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தோன்றிய திருத்தந்தை 14ஆம் ஆசீர்வாதப்பர், இவர் கண்ட காட்சிகளைப் பற்றிக் கூறுகிறார். "இவை போன்ற காட்சிகளைத் திருச்சபை ஏற்றுக்கொள்கிறது. விசுவாச சத்தியமாக ஏற்றுக்கொள்ளா விடினும், நம்பத் தகுந்தவை எனக் கற்பிக்கிறது".●

# கட்டுரை

## தற்காலப் பின்னணியில் மனித துன்பம் ஓர் விவிலியப் பார்வை

அந்தோனி யூட் செல்வராஜன் லெம்பட்.
மறையாசிரியர், வங்காலை.

(சென்ற மாத தொடர்ச்சி)

மனிதத் துன்பத்திற்கு காரணம் மனிதன் மட்டுமா என்றால் அது கேள்விக்குரியதே காரணம் கடவுள் மனிதனுக்குத் துன்பத்தை கொடுப்பதில்லை யோபு 34:10. "தீங்கிளைப்பது இறைவனுக்கும் தவறிளைப்பது எல்லாம் வல்லவருக்கும் தொலைவாய் இருப்பதாக. ஆனால் அதனை அனுமதிக்கின்றார். அது எவ்வாறெனில் தான் படைத்த மனிதன் தனது கட்டளையை மீறிப் பாவம் செய்தபோது அதற்கான தண்டனையை வழங்கி அவனை உலகில் துன்பத்தோடே வாழுமாறு அனுப்பிவிடுகிறார். தொ.நூ 3:23-24. "மண்ணைப் பண்படுத்த அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பி விட்டார். மனிதனை வெளியே துரத்திவிட்டார். அதன்படி பாவத்திற்குத் தண்டனையாக கடவுள் துன்பத்தை அனுமதிக்கின்றார். நோவாவின் காலத்தில் மனிதனின் பாவம் வெகுவாக அதிகரித்தபோது, தொ.நூ 6:3. "ஆண்டவர் என் ஆவி தவறிழைக்கும் மனிதனில் என்றென்றும் தங்கப் போவதில்லை. இனி அவன் நூற்றிருபது ஆண்டுகளே வாழ்வான்." தொ.நூ அதி. 7:8. உலகின் பாவம் பெருகி அது உச்சநிலையை அடைந்தபோது வெள்ளப்பெருக்கினால் உலகம் அழிக்கப்படல்., தொ.நூ 19:23-26. சோதோம், கொமோரா மக்களின் தீச்செயல் காரணமாக கடவுள் அந்நகர்களை நெருப்பினாலும், கந்தகத்தினாலும் எரித்தார்., எண் 16:31-33. கோராகு, நாத்தான், ஆபிராம் ஆகியோர் மோசே, ஆரோனுக்கு எதிராகப் புரட்சி செய்தபோது ஆண்டவர் அவர்களையும், அவர்களைச் சார்ந்தோரையும் தரையைப் பிழந்து அதற்குள் போகச் செய்தார்., 2அர. 17:10-23. கடவுளை விட்டுப் பிரிந்து அன்னிய தெய்வங்களை வழிபட்ட வட அரசை அசிரியர் கையால் அழித்தார்.

கடவுள் மனிதனுக்கு துன்பத்தை அனுமனிப்பது விவிலியத்தின் படி தண்டனையாக மட்டுமா? என்றால் அது மட்டுமல்ல கடவுள் மனிதன் மீது துன்பத்தை இரு நோக்கங்களின் அடிப்படையில் அனுமதிக்கின்றார், முதலாவது இறையுறவில் இருந்து விலகி பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் மனிதன் தன்னை உணர்ந்து திருந்த, தன்னைப் படைத்த கடவுளைத் தேடிவர துன்பத்தை அனுமதிக்கின்றார். அதனைப் பல வகையில்க் காணலாம், தம் பாவத்தை உணர்ந்து மனிதர் தம்மைத் தேடிவரச் செய்தல். யோபு 36:15. துன்புற்றோரைத் துன்பத்தால் காப்பார், வேதனையால் அவர்கள் காதைத் திறப்பார்., சா.ஞா 12:22. நீர் எங்களை நல்வழிப்படுத்த கண்டிக்கின்றீர். எண் 21:4-6. இஸ்ராயலர் ஏதொம் நாட்டருகே பயணப் பாதையின் கடினத் தன்மையை முன்னிட்டு மோசே, கடவுளுக்கு எதிராக முணுமுணுத்த போது கடவுள் அவர்களைக் கொள்ளிவாய் பாம்புகள் மூலம் கடியுண்டு இறக்கச்செய்தார். எண் 21:7-9. இஸ்ராயலர் தம் பாவத்திற்கு மனம் வருந்திய போது அத்துன்பத்தை நீக்கி விட்டார்., நீ.தி 3:12-13. இஸ்ராயலர் கடவுள் பார்வையில் தீயதெனப்பட்டதை செய்ததால் அவர் அவர்களை அம்மோனியரிடமும், அமலேக்கியரிடமும் ஒப்படைத்தார். நீ.தி.3.29-30. இஸ்ராயலர் மனம் வருந்திய போது கடவுள் அவர்களை எகூது மூலம் துன்பத்தில் இருந்து விடுவித்தார். இஸ்ராயல் வரலாறு முழுவதும் இதனைக்காண முடிகிறது.

மனிதன் (நீதிமான் – நேர்மையாளர்) தன் மீது கொண்டுள்ள அசையாத பற்றுறுதியை வெளிப்படுத்தவும், நன்மைத்தனங்களைப் பெற்றுக்கொள்ளவும் துன்பத்தைக் கடவுள் அனுமதிக்கின்றார். (யோபு நூல்) நேர்மையாளரான யோபு இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். தொ.நூ. 12.15-20. சாராவை ஆபிரகாமின் சகோதரி என்று எண்ணி எகிப்திய மன்னன் பார்வோன் தன் மனைவியாக்க அழைத்தான் அவள் பொருட்டு ஆண்டவர் பார்வோன், எகிப்து நாடு முழுவதையும் தண்டிக்க பார்வோன் உண்மையை அறிந்து அனைத்து செல்வங்களோடும் அவர்களை அனுப்பி வைத்தான். அதேபோல கேரார் மன்னன் அபிமலேக்கு சாராவைத் தன் மனைவியாக்க விரும்பினான் அன்றிரவே ஆண்டவர் கனவில்த் தோன்றி அவனை எச்சரித்து அபிரகாம் நேர்மையாளரென வெளிப்படுத்தினார். தொ.நூ. 20.2-7. "அவன் ஓர் இறைவாக்கினன். யோசேப்பின் வாழ்விலும் இதைக் காண முடிகிறது. தொ.நூ.37.28. யோசேப்பு அவரது சகோதரர்களால் எகிப்து சென்ற இஸ்மவேலரிடம் இருபது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். தொ.நூ.41.46. எகிப்து நாடு முழுவதற்கும் யோசேப்பு ஆளுனன் ஆனார்.

விவிலிய பார்வையில் தற்கால பின்னணியில் மனிதத் துன்பத்திற்கான மற்றொரு காரணம் கடவுளின் வார்த்தை உரிய காலத்தில் நிறைவேறுதலாகும். நமதாண்டவர் இயேசு கூறுகிறார், லூக். 12.54-56. "நிலத்தின் தோற்றத்தையும் வானின் தோற்றத்தையும் ஆராய்ந்து பார்க்க அறிந்திருக்கும் போது இக்காலத்தை நீங்கள் ஆய்ந்து பாராமல் இருப்பது எப்படி. இதன்படி நோக்குகின்றபோது இறைவாக்கினர் நூல்களிலும், தானியேலின் புத்தகம், திருவெளிபாடு, இயேசுவின் வார்த்தைகள் இன்று நிறைவேறுகின்றது என்பதையும் உணர முடிகிறது. மத் 24:6-8. போர் முழக்கங் களையும் போர்களைப் பற்றிய செய்திகளையும் கேட்ப்பீர்கள். நாட்டை எதிர்த்து நாடும், அரசை எதிர்த்து அரசும் எழும், பஞ்சமும்., நிலநடுக்கங்களும் ஏட்படும்., என்ற இயேசுவின் வார்த்தைகள் தற்காலத்தில் நிறைவேறி வருகிறது. மேலும் தானி 12:4. உலகின் நிகழ்காலத்தைத் தெரிந்துகொள்ள பலர் வீணிலே முயற்சி செய்வர். இன்று மனிதனின் அறிவு பெருகி பலவற்றைக் கண்டுபிடிக்க முயன்று அதன் விளைவாகவே பல அழிவுகள், துன்பங்கள் மனித குலத்தை வந்தடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அணுக் கதிரியக்கத்தின் தாக்கம், ஓசோன் படையில் துவாரமும் வெப்பநிலை அதிகரிப்பும், புற ஊதாக்கதிர்களின் தாக்கமும், நோய்களும். போன்றவை இதற்கு சில சான்றுகளாகும்.

விவிலியத்தின் நிறைவு நூலான திருவெளிபாடு குறிப்புக்களும் இங்குக் கூறத்தக்கது. தி.வெ.8.2-9.16., ஏழு எக்காளங்கள், தி.வெ. 16.1-21. ஏழு கிண்ணங்கள். இவற்றில் குறிப்பிடப்படும் வாதைகள் பலவற்றை தற்காலத்தில் அவதானிக்க முடிகிறது. கதிரவனின் வெப்பம் அதிகரித்தல், குடிநீர் அற்றுப் பொதல், தீயால் காடுகள் அழிதல், கடல்வாழ் உயிரினங்கள் அழிவடைதல், யுத்தம், கொடிய பஞ்சம், கொள்ளை நோய்கள், நில நடுக்கம் , சுனாமி, இடி மின்னல்த் தாக்கங்கள் போன்ற பல சொல்லண்ணா வாதைகள் தற்காலத்தில் மனித குலத்தைத் துன்பத்திற்கும் அழிவிற்கும் உள்ளாக்கி வருகின்றன. இதன்படி தற்கால மனிதத் துன்பங்களை இதனோடு ஒப்பு நோக்குகின்றபோது விவிலியப் பார்வையில் தீர்க்கதரிசனங்களும், இயேசுவின் வார்த்தை -களும் நிறைவேறுகின்றன என்பதைக் காண முடிகிறது.

தற்காலத்தில் மனிதன் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளான். அவனது கண்டுபிடிப்புக்கள் அளப் பெரியது. இந்தப் புவியைக் கடந்து விண்ணை கதிரவன் வரை அவன் சென்று விட்டான். எந்தளவிற்கு அவன் முன்னேற்றம் அடைந்துள்ளானோ அதைவிட மேலாக மனிதன் துன்பங்களையும் தற்காலத்தில் அனுபவிக்கின்றான். எனவே தற்காலப் பின்னணியில் மனிதத் துன்பங்கள் – ஓர் விவிலியப் பார்வை என்ற விடையத்தை நோக்குகின்றபோது முற்கால -மாயினும், தற்காலமாயினும் மனிதத் துன்பத்திற்கான முதல் காரணி மனிதனே. அதாவது மனிதனின் கீழ்ப்படியாமையே பிரதானமான காரணமாகும். தான் என்ற ஆணவமும். பேராசையும், சுயநல விருப்பும், மோகமும், புகழ்பெற வேண்டுமென்ற ஆசையும் மனித துன்பத்திற்கு ஏதுவானது. அத்தோடு கடவுள் அவனுக்குக் கொடுத்த பகுத்தறிவை தவறான வழியில் பயன்படுத்தியதும் இதற்குத் ஏதூவானது. மேலும் மனிதனின் பாவத்திற்கான தண்டனையாகவும், பாவத்தில் இருந்து விடுபட்டு படைத்தவனாகிய தன்னைத் தேடிவர வேண்டுமென்று கடவுளும் துன்பத்தை மனிதனுக்கு அனுமதிக்கின்றார். அதன் வழியிலேயே கடவுள் உரைத்த வார்த்தைகள் நிறைவேறுகின்றன. அதனாலும் மனிதன் துன்பத்தை எதிர்கொள்கின்றான். எனினும் சில சமயங்களில் மட்டும் கடவுளின், மனிதர்களின் (நீதிமான்கள்) நேர்மைத் தன்மையை சோதிக்க அதை உலகறியச் செய்ய கடவுள் துன்பத்தை அனுமதிக்கின்றார்.

தொகுத்து நோக்குகின்றபோது "தற்காலப் பின்னணியில் மனிதத் துன்பங்கள் - ஓர் விவிலியப் பார்வை என்ற தலைப்பிலான இந்த கட்டுரையில்க் கண்டுகொள்ளப்பட்ட முடிவு யாதெனில் துன்பத்திற்குக் காரணம் மனிதன். கடவுள் அத்துன்பத்தை அனுமதிக்கிறார் என்பதாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.230
## எசேக்கியேல் (அதிகாரம் 41 முதல் 48 முடிய)

உங்கள் விடைகளை ஆவணி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | | 02 |
| | | 03 | | | | | ✸ | | | 04 | |
| | 05 | | | | | | | 06 | ✸ | | |
| | | 07 | | | | | | | 08 | | |
| | | | | 09 | | | 10 | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | 11 | | ✸ | | | ✸ |
| | | | | | 12 | | | | | | |
| | | 13 | | | ✸ | 14 | | | | | |
| | 15 | | | | | | | | | 16 | |
| 17 | | | | | | | | | | | 18 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்
1. அவர் ......................... நீளத்தை அளந்தார்.
3. மக்கள் முன்னிலையில் நின்று அவர்களுக்கெனத் ............ புரியலாம்.
5. இஸ்ரயேல் வீட்டார் இனி ஒருபோதும் என் திருப்பெயரைத் தீட்டுப்படுத்த .......................
7. பின்னர் ஆவி என்னைத் தூக்கி உள் முற்றத்திற்கு ..................ச் சென்றது.
14. அதன் நடுவில் ஆண்டவரின் ......................... இருக்கும்.
12. உங்களிடம் சரியான எடைக்............... இருக்க வேண்டும்.
15. உன் ....................... நுழைகையில் எக்குருவும் திராட்சை மது அருந்தலாகாது.
17. அதில் கிடைக்கும் விளைச்சல் நாட்டின் பணியாளருக்கு ..............................

### மேலிருந்து கீழ்
1. கோவிலைச் சுற்றிலும் அதன் தளமேடை ......................க் கண்டேன்.
2. அந்த மனிதர் என்னிடம் "......................... திரு முன்னிலை மேசை இதுவே" என்றார்.
4. அவர் ......................... பணியாற்ற அதன் உள்முற்றத்தில் நுழையும் நாளில் பாவம் போக்கும் பலியைத் தமக்காக ஒப்புக் கொடுக்க வேண்டும்.
6. உங்கள் சிறப்புக் காணிக்கைகளில் உன்னதமானவை யாவும் குருக்களுக்கே...........................................
7. அவர் கிழக்குப் பகுதியை ............................. அளந்தார்.
8. அதன்.............................. ஆண்டவரின் தூயகம் இருக்கும்.
9. அவர்கள் அவற்றை வெளிமுற்றத்திற்குக் கொண்டு போவதன் மூலம் தூய்மை மக்களுக்குச் சென்று விடுவதைத் .................... இவ்வாறு செய்வர்.
10. அங்கு அது ..................... கலக்கிறது. (1ம் 2ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)

### வலமிருந்து இடம்
2. இருபுறத்திலுமுள்ள சுற்றுக்கட்டுக்களின் விளிம்பை .............க் கொண்டிருந்தன.
4. என் ஓய்வுநாள்களைத் .................யாய்க் கொள்ளவேண்டும்.
6. அவர்களுக்கு இஸ்ரயேலில் யாதொரு ........................... தர வேண்டாம். (இறுதி இருஎழுத்துக்கள் மாறியுள்ளன.)
7. மக்கள் பகுதிக்குள் போகும்முன் அவர்கள் வேறு ஆடைகளை ......................... கொள்ளவேண்டும். (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
8. யாராலும் ....................... கடக்க முடியாத ஆறாய் ஓடியது. (குழம்பியுள்ளது.)
9. முற்றங்களில் இருந்தது போல மூன்றாம் ............................ தூண்கள் இல்லை. (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
16. ஒவ்வொரு குலப்பகுதியின் நிலத்திற்கும் ...................... இது இருக்கவேண்டும்
18. தூயகத்திற்கும் நகருக்குமான ............................. ஒதுக்கி வைப்பீர்களாக.

### கீழிருந்து மேல்
5. ஆண்டவரின் ......................... கோவிலை நிரப்பிற்று (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன.)
11. இதோ தண்ணீர் தெற்குப் பகுதியிலிருந்து.......................... கொண்டிருந்தது.
12. தலைமுடியைக் .............க் கொள்ளட்டும்.
13. நீங்கள் இஸ்ரயேல் குலங்களுக்கு உரிமைச் ....................ப் பங்கிட வேண்டிய நாடு இதுவே.
15. அவற்றை ஆண்டவரின் ................படைக்க வேண்டும்
16. என் தலைவர்கள் .................. என் மக்களைத் துன்புறுத்த மாட்டார்கள்.
17. அவர்கள் அதிலிருந்து கொஞ்சமும் விற்கவோ .................... மாற்றம் செய்யவோ கூடாது.
18. நீங்கள் ..........வேண்டிய சிறப்புக் காணிக்கை இதுவே.

**விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 228**
**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**
பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
R. ஜெகநாதன்
மடுக்கரை



**இரண்டாம் பரிசு:**
J. அனுசியா
ஆண்டாங்குளம்

**மூன்றாம் பரிசு:**
நி.யாழிசன்
செட்டிகுளம்

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 22 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 19 பேர்.**

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.228ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. செல்வி வயலட் யோண் - யாழ்ப்பாணம்
2. வி. மேரி றெஜினா – சின்னப்பண்டிவிரிச்சான்
3. சி. வி. யோட்ஸ் - சின்னப்பண்டிவிரிச்சான்
4. சா. டெய்சி லியோன் - முத்தரிப்புத்துறை
5. நி. கெப்றோன் குரூஸ் - முத்தரிப்புத்துறை
6. அ. கில்டா – கட்டையடம்பன்
7. J. பியூநிக்கா – ஆண்டாங்குளம்
8. M. பிளண்ரீனா, மன்னார்
9. சியாமா - பெற்றா
10. சந்தியோகு போல் றொபின்சன் - பெரிய நீலாசேனை
11. ம.மரியலோஜினி – சாந்திபுரம்
12. D. P.சாறா – மாவிலங்கேணி
13. D.P. டக்ஷன் யோணாஸ் - மாவிலங்கேணி
14. E.A.டிவைன்சி – சாவற்கட்டு
15. R. சறோஜினி – யோசவ்வாஸ்நகர்
16. R. லிவி பிகிறாடோ – பள்ளிமுனை கிழக்கு
17. J.T. ரேறியன் - பள்ளிமுனை மேற்கு
18. T.றேச்சல் - பள்ளிமுனை மேற்கு
19. R. றொயின்சி பிகிறாடோ – பள்ளிமுனை கிழக்கு

**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

## 1ம் பக்கத் தொடர்ச்சி
## மடுத் திருத்தல ஆடித்திருவிழா...
### ஆயர்தந்தை அவர்களின் மறையுரையின் தொகுப்பு

பகிர்ந்து வாழ்வதிலும் நன்மை செய்வதிலும் கருத்தாயிருங்கள். கிறிஸ்து இயேசுவில் அன்பான சகோதர, சகோதரிகளே பல்வேறு துயரங்கள், சுமைகள், தாக்கங்களை எல்லாம் தாங்கியவர்களாக இந்த மடு அன்னையிடம் இங்கே வந்து நிற்கின்றோம். கடந்த 74ஆண்டுகளாக இந்த நாட்டை ஆண்டவர்கள் சுரண்டி நம் நாட்டை இன்று பிச்சைக்கார நாடாக நிறுத்தியிருக்கிறார்கள். இந்து சமுத்திரத்தின் முத்து என்று அழைக்கப்பட்ட நம் நாடு இன்று பிச்சை கேட்டு நிற்கின்றது. என்று சொன்னால் 74 வருடங்களாக எமது நாட்டை ஆண்டவர்கள் எல்லாவற்றையும் சுரண்டி எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அன்பானவர்களே இந்தக் கவலைகளோடு எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது, பிள்ளைகளின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது, என்றெல்லாம் ஏங்கிய வண்ணமாக, பலருக்கு இங்கே வர விருப்பம் இருந்தும் வரமுடியாமல் இருக்கின்றார்கள். பொருளாதார நெருக்கடி போன்ற இப்படியான சூழ்நிலையில் நீங்கள் ஏன் இங்கு வந்திருக்கிறீர்கள்! மரியன்னை எமக்காக பரிந்துபேசி நமக்கு வேண்டியவற்றைப் பெற்றுத் தருவாள். இதுதான் ஒரே ஒரு நம்பிக்கை.

தன் மகனிடம் எங்களுக்காக வேண்டுவாள் நம் அன்னை மரியாள். கானாவூர் திருமண விழாவிலே ஒரு குறை ஏற்படப்போகிறது என்று கண்டு மரியன்னை தம் மகனிடம் போய் சொல்கிறாள், அதற்கு அவர் "எனது நேரம் இன்னும் வரவில்லை" என்று மறுமொழி சொன்னார். ஆனால் அவள் அத்தோடு நிற்கவில்லை. அங்கே நின்ற ஊழியர்களிடம் "அவர் சொல்கின்றபடி செய்யுங்கள்" தனது அன்னையின் கட்டளையை தனது நேரம் வரவில்லை என்று சொன்னவர் அங்கே நீரை ரசமாக்குகின்றார். இந்த அன்னையின் பரிந்துரை எவ்வளவோ பெரியது. இயலாது என்று சொன்ன மகனை இந்தப் புதுமையைச் செய்யப் பண்ணியவள். இந்த விசுவாசம்தான் அன்பார்ந்தவர்களே இன்று உங்களை இங்கே அழைத்திருக்கின்றது. மரியன்னையின் வாழ்க்கையில் நாம் காண்பது பிரமாணிக்கம், ஆகட்டும் என்று சொல்லி தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்தவள்.

கடைசி வரையும் பிரமாணிக்கமாக இருந்தாள். கணவன் புரிந்துகொள்ளவில்லை, இடப்பெயர்வுகள், வறுமைகள் இவற்றை எல்லாம் சுமந்து தன் மகனை சிலுவையடியில் நின்று ஒப்புக் கொடுக்கின்றாள். பிரமாணிக்கம் தவறவில்லை. கொடுத்த வார்த்தைக்கு தான் செய்யவேண்டியதை மறைவாகவும், எளிமையாகவும் செய்து கொண்டே வந்தாள். அந்த இறைநம்பிக்கை, தன்னை முழுமையாக அர்ப்பணித்த அந்த பிரமாணிக்கம் அன்பார்ந்தவர்களே, இன்று அற்றுப்போகிறது. அது தொழிலாக இருக்கலாம். குடும்ப வாழ்க்கையாக இருக்கலாம். ஏன் துறவற வாழ்க்கையிலேயும் பிரமாணிக்கம் அற்றுப் போகிறது. ஏனென்றால் நாங்கள் இப்போது எல்லாவற்றுக்கும் காரணம் சொல்ல துணிந்து விட்டோம். நாம் புத்திசாலிகள், அதிகம் படித்து விட்டோம் என எண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

**மரியன்னை**
**எமக்காக பரிந்துபேசி**
**நமக்கு வேண்டியவற்றைப்**
**பெற்றுத் தருவாள்.**
**இதுதான்**
**ஒரே ஒரு நம்பிக்கை.**

முன்னெல்லாம் ஒரு திருமணம் ஐம்பது, அறுபது ஆண்டுகள் நிலைத்திருந்தது. ஆனால் இப்பொழுது ஒரு மாதம், ஒரு கிழமை பின் விவாகரத்து காரணம் என்னால் இவரோடு வாழ முடியாது, சுயநலம். இன்பத்திலும் துன்பத்திலும் உடல்நலத்திலும் நோயிலும் நான் பிரமாணிக்கமாக இருப்பேன் என்று சொல்லி விட்டு வார்த்தை தவறுகின்றனர். இப்படியானவைகள்தான் இங்கே நடக்கின்றது. பிரமாணிக்கம் எங்கே? முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் துன்பங்கள் துயரங்கள் ஊடாக குடும்பத்துக்காக வாழ்ந்தார்கள், தியாகங்கள் செய்தார்கள், தங்களைத் தேய்த்துக் கொடுத்து குடும்பத்தை வளர்த்தார்கள். இப்போது திருமணம் செய்பவர்கள் "நான் வளரவேண்டும்" என்ற ஒரு நோக்கம். மற்றவருக்காக வாழ்வதோ, சிந்திப்பதோ கிடையாது. தொழிலை எடுத்துப் பாருங்கள் பிரமாணிக்கம் இருக்கின்றதா? மைக்கல் ஆஞ்சலோ வியாகுல அன்னையின் சுருவத்தை வடித்து விட்டு ஒரு சிறிய வார்த்தையை இட்டார்.

"பிரமாணிக்கம்" இதுதான் அந்த வார்த்தை ஏனென்றால் இவள்தான் பிரமாணிக்கம் என்பதற்கு வரைவிலக்கணம். ஆகவே நாங்கள் மரியன்னையைப் போல் பிரமாணிக்கமாக வாழ வேண்டும். அடுத்ததாக பிறர் தேவையைக் கண்டு போய் உதவி செய்தல், எலிசபெத் முதிர்ந்த வயதிலேயே கருத்தரிக்கின்றாள். பிரசவம் கடினமாக இருக்கும். ஆகவே தானும் வயிற்றில் குழந்தையை தாங்கியவளாக தானாகவே நடந்த போய் எலிசபெத்திற்கு பணிவிடை செய்கின்றாள். ஆனபடியால்தான் அவள் கூறினாள். "ஆண்டவர் சொன்னது நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" அவ்வளவிற்கு மரியன்னை பிறர் தேவையை அறிந்து செல்வாள்.

புனித சின்னப்பர் கூறுகின்றார் "பகிர்ந்து வாழுங்கள், நன்மை செய்யுங்கள் இவை இரண்டும் தான் கிறிஸ்தவ வாழ்வு. வேறொன்றுமில்லை. எனக்கென்று இருப்பதைக் கொடுப்பது தான் உண்மையான ஈகை. ஆண்டவர் இயேசு இறுதியில் கேட்பார், "சின்னஞ் சிறியவர்களுக்கு நீ செய்த பொழுதெல்லாம் எனக்கே நீ செய்தாய்" இதற்கு மறுமொழி தான் நாங்கள் கொடுக்க வேண்டும். அன்பார்ந்தவர்களே கிறிஸ்தவ வாழ்விலே நாம் நன்மை செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். அன்னை தெரேசாவை லண்டனில் இருந்து ஒரு பிள்ளை பார்க்கசென்ற போது அவர் தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனை கழுவிக் கொண்டிருந்தார். அப்போது அந்தப் பிள்ளை சொன்னார், எனக்கு ஆயிரம் பவுண் தந்தாலும் இதை நான் செய்யமாட்டேன் என்றார்.

அதற்கு புனித அன்னை தெரேசா கூறினார். நான் செய்வதில் கிறிஸ்துவைக் காண்கின்றேன். இதுதான் அவருடைய பிறர் சினேகம், நன்மை செய்தல். அன்பானவர்களே மரியன்னையிடம் நாங்கள் வந்திருக்கின்றோம். எங்களுடைய தேவைகளை அவள் நன்கு அறிவாள். நாங்கள் அவளிடம் மன்றாடுவோம், நம்முடைய தேவைகளை அவர் மகன் வழியாக பெற்றுத்தர வேண்டும் என்று, ஆனால் நாம் அவர் சொல்கின்ற வழியில் வாழ வேண்டும். பகிர்ந்து வாழ வேண்டும், நன்மை செய்ய வேண்டும். இந்த உலகம் இயங்குவது வல்லவர்களால் அல்ல, இந்த உலகத்திலுள்ள நல்லவர்களால் மட்டுமே. பகிர்ந்து வாழ்தலும், நன்மை செய்தலுமே நம் வாழ்வின் அடித்தளம், இதற்காக மரியன்னை மூலம் இறைவனை வேண்டுவோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## 31ம் நாள் நினைவஞ்சலி

"நான் வாழும் நாளெல்லாம் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்.
என் உயிர் உள்ளவரையிலும் என் கடவுளுக்கு புகழ் சாற்றிடுவேன்". (தி.பா 104:33)



### செபமாலை எலிசபெத் றோச்

(மகிழம்மா)

மலர்வு:- 1932.03.13 உதிர்வு:- 2022.06.05

உங்கள் வாழ்வு பலருக்கும் பலவிதமான
பணிகள் மூலம் பல உள்ளங்களை தேடினீர்கள்.
உங்கள் வாழ்வு மூலம் பயன்பெற்றோர் பலர்.
பக்தி சபைகள் மூலமாக பங்கிற்கும்
பங்கு மக்களுக்கும் பணியாற்றினீர்கள்
உடன்பிறப்பிற்கும் உறவுகளுக்கும் ஆற்றியதை
எண்ணும் போது நன்றி நவில வார்த்தைகள் இல்லை.
இறைவனே உங்கள் வாழ்வை
தன்னோடு இணைய அழைத்துள்ளார்,
இன்ப சாந்தியை ஆற்றிடுவார்.

உங்கள் அன்பில் வாழும்:- தங்கை அருட்செல்வி. தெரேசிஞ்டா - அ.கா,
மகள் அருட்செல்வி அமலி அ.கா, பேரப்பிள்ளை அருட்செல்வி ஜெனோ அ.கா மற்றும் உறவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன. கடுந்தொல்லை எதுவும்
அவர்களை தீண்டாது" (சா.ஞா 3:1)

### அமரர். செபஸ்ரியான் யேசுதாசன்

(முருங்கன்பிட்டி, முருங்கன்)

மலர்வு: 04.03.1950
உதிர்வு: 28.07.2021



அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்!
இரக்கத்தின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
நகைச்சுவையுடன் பேசி எல்லோரையும் மகிழ வைத்தீர்!
கலைத்துறையில் சிறந்த வித்துவானாக திகழ்ந்து
ஆலயங்களில் இசையால் இறையாசீர் பெற்றீர்!
அடைக்கலம் தந்த உம்மை ஆண்டவன் ஏனழைத்தான்
பண்புள்ளோரைப் பலகாலம் வாழவிடக் கூடாதென்றா?
என்ன செய்வோம் இறைவன் சித்தம் இதுவென்றால்,
எத்தனை வருடங்கள் கடந்தாலும் உங்கள் புன்னகை
நிரம்பிய முகம் எம் இதயங்களை விட்டு
நீங்கப் போவதில்லை உங்கள் ஆன்மா ஆண்டவன்
சந்நிதியில் அமைதியுடன் இளைப்பாற வேண்டி நிற்கும்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

"நீ பயப்படாதே நான் உன்னை தாங்குவேன்" (ஏசா 41:10)

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1931 |  | 2021 |
| 12 | | 07 |
| 25 | | 02 |

### அமரர். காசிப்பிள்ளை பெனடிக்ட்

நீர் இளவயதுள்ளவராக இருந்தபோது
உம்மை நீரே அரைகட்டிக் கொண்டு
உமக்கு இஸ்ரமான இடங்களில் நடந்து திரிந்தீர்.
நீர் முதிர்வயதுள்ளவராக இருந்தபோது சாத்தானால்
மரணத்திற்கு ஏதுவாக விழுத்தப்பட்டு (2017.01.20)
சாவுக்கேதுவாக முறிக்கப்பட்டு (2020.02.08) இறப்புக்கு
உள்ளாக்கப்பட்ட போது உமது கைகளை நீர் நீட்டிய
போது வேறொருவர் உமது அரையை கட்டி உமக்கு
இஸ்ரமில்லாத இடத்திற்கு உம்மைக் கொண்டு
சென்று விட்டார்களல்லவா!

பிரிவால் துயருறும்
மூத்த மகன் சேவியர் ஞானமனோகரன் (சுந்தரன்)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1949 |  | 2021 |
| 04 | | 07 |
| 09 | | 16 |

### அமரர். செபஸ்ரியான் கிறிஸ்தோபர்

(முருங்கன்)

"மண்ணுலக வாழ்வின் உறைவிடம் அழிந்ததும்
விண்ணுலகில் ஒரு வீடு ஆயத்தமாய் இருக்கின்றது"

பாசத்திற்கு இருப்பிடமாய், துயரத்தில் மகிழ்ச்சியாய்
எங்களுக்கு ஆரயிர் ஐயாவாய்,
எங்களை வழிநடத்திய ஐயா - ஏன்
பரிதவிக்க எங்களை பிரிந்து சென்றுவிட்டீர்.
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு மாறாதய்யா,
சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும்
மறவாதீர்கள்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்" (யோவா 11:25)

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 1948 |  | 2021 |
| 03 | | 07 |
| 13 | | 18 |

### அமரர். சந்தியா மரியதாஸ் குருஸ்

(பேசாலை)

அப்பா ஆண்டொன்றுதான் கடந்தாலும்
ஆறவில்லை எங்களின் துயரம்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எங்கள் மனக்கண் முன்னே நிற்கின்றது
எங்களின் நல்வாழ்வுக்காய் பாடுபட்டு உழைத்தீர்கள்
எங்களின் ஆசானாய் வழிகாட்டியானீர்கள்
கண்ணின் மணிபோல எங்களைக் காத்தீர்கள்
காலங்கள் கடந்தாலும் மறவோம் நாம் உம்மை
உங்களின் ஆன்மா ஆண்டவரின் சந்நிதியில்
அமைதியில் இளைப்பாற இரஞ்சி வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1945 |  | 2021 |
| 11 | | 06 |
| 17 | | 27 |

### திரு. பேதுரு மனுவேல்

எங்கள் உணர்வுகளோடு கலந்து எங்கள் நினைவில் வாழும்
அன்பு அப்பாவே! ஆண்டு ஒன்று ஆனது ஐயா
மாநிலத்தில் நீ பிரிந்து தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு உறவுகளை தவிக்கவிட்டு இமைகளை மூடிவிட்டாய்
எம்மையெல்லாம் அழவிட்டு இறைவனை நாடிவிட்டாய்
உன்னை எண்ணித் தினம் தினம் மனம் வெதும்புகின்றோம்
ஆயினும் நீர்செய்த புண்ணியங்கள் இன்று எம்மை
ஆறுதல்படுத்துகின்றதப்பா உம் வாழ்வு எமக்கு மட்டுமன்றி
சமூதாயத்துக்கும் முன்மாதிரிகையப்பா
நெஞ்சம் ஆறவில்லை உம் பிரிவை எண்ணி எம்முடன்
வாழ்வதாகவே உணர்கின்றோம். எல்லாம் இறைசித்தமென
எண்ணி உங்கள் ஆன்மா இறைவனின் மடியில்
அமைதியில் இளைப்பாற இறைவனிடம் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:- மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | இறப்பு |
|---|---|---|
| 1963 |  | 2021 |
| 10 | | 07 |
| 02 | | 17 |

### திரு. பாலசுப்பிரமணியம் தியாகராசா


(பெரியநொச்சிக்குளம், நேரியகுளம்)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே,
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"

அன்பின் உறைவிடமே பாசத்தின் இருப்பிடமே எங்கள் அன்பான
தந்தையே நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து ஓராண்டு ஓடி
மறைந்தாலும் உங்கள் நினைவுகள் மட்டும் எம்மைவிட்டு அகலாது
பாசமான கணவராக, நல்ல தந்தையாக அன்பான மாமனாராக,
பாசமான அப்பப்பாவாக எம்மோடு வாழ்ந்து ஆசைப் பேரக்குட்டிகளின்
மழலைக் குரலைக்கூட கேட்க முடியாமல் ஏன் அப்பா பறந்துவிட்டீர்கள்
உங்கள் இழப்பை ஏற்க முடியவில்லையப்பா வாழ்வினில் நீர் எமக்கு
கற்றுத் தந்தவை வழி நெடுகில் எம் கூட வர ஆறாத
வலியின் சுவடுகளுடன் பிரார்த்திக்கின்றோம்
உம் ஆத்ம சாந்திக்காக

உம் பிரிவால் துயருறுவோர்:- குடும்பத்தினர்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 13 |  | 19 |
| 07 | | 07 |
| 1944 | | 2020 |

### அமரர். சீனிவாசகம் யூட் இராமலிங்கம்

"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம்.
ஆகவே நீ எமக்கே சொந்தம்"

அப்பா என்றால் அன்பு, ஆசை, ஆர்ப்பரிப்பு, அமைதி, அறிவு,
ஆனந்தம், அறத்திற்கு அரிச்சுவடி,
இல்லறத்தின் அளவுகோல், வாய்மையின் வெற்றிவீரன்,
வாழ்க்கையில் எப்போதும் ஒரு நல்ல மனிதன்
எல்லோரினதும் நண்பன், ஆனால் எமது உயிர்.
அப்பா நீங்கள்தான் எமது இயேசு காவியம்
நீங்கள் எப்போதும் எங்களுடன்!
மாதாவே! உம் அன்பு மகனை நீரே கையேற்றுக் கொள்ளும்!!

பிரிய முடியாமல் தவிக்கும்
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், நேசம்நிறை பேரப்பிள்ளைகள்,
உண்மை உறவுகள் மற்றும்நல்ல நண்பர்கள்.

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org